1661

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

1661
3-55

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 SEP 1955
MADRAS

ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்.

72
N55·14·9
199560

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	242
2.	செய்திகள்	244
3.	மஹாவீரவைபவம் [ஸ்ரீ. உப. பாதூர், ராகவாசார்யஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர், ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	245
4.	திருப்பாவைக்கதை [ஸ்ரீ. உப. திருவரங்கம், திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M O.L., திருப்பதி.]	249
5.	பட்டாபிஷேக ஸ்ரீமுகம் [ஸ்ரீ. உப. தோட்டாலம். வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, தலைமைஆசிரியர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்கூல், ஸ்ரீரங்கம்.]	253
6.	சொல்லொன்று செயலொன்று [ஸ்ரீ. உப. புரிசை, நடாதூர், க்ருஷ்ணமார்ய ஸ்வாமி, சிரோமணி, திருவள்ளூர்.]	257
7.	43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	260
8.	ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் [ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]	263

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam;
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 14 } மன்மதஸ்ரீ புரட்டாசிமீ { ஸஞ்சிகை 9

'ஸுஹ்ருதி பாரதஸ்வாபகல்பாய
க்ஷேமகர்ணவ்யசோதயங்கனிதசுர்யம்
ப்ரஹ்மோஷாஷ்ரதுர்வ்யாப்யாஸம்
ஜயதி ந்ருஸிம்ஹம் ஸ்ரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீந்ருஸிம்ஹகருணோத்பூதா ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய் கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

தோல்வழியே நல்வழி

உலகில் பல வஸ்துக்களை நாம் நேரில் காண்கிறோம். நேரில் காணமுடியாதபடி பல வஸ்துக்கள் இருப்பதை நமது சக்தியினால் அறிகிறோம். இம்மாதிரியான அறிவே மனிதனுக்குக் கிடைத்த அதிர்ஷ்டம். நேரில் காணும் வஸ்துக்கள் அழிவதை நாம் பார்த்துக்கொண்டே இருக்கிறோம். இம்மாதிரியான அழிவு என்பது பெயரிலும், உருவத்திலும் மாத்திரமேயன்றி அடிப்படைத் தத்துவத்தில் அல்ல. அடிப்படைப் பொருளானது அழிவதே இல்லை. இவைகளைத் தான் நித்யமான வஸ்துக்கள் என்கிறோம், மற்றவைகளை அநித்யம் என்கிறோம். இம்மாதிரியான நித்யா நித்ய வஸ்துக்களை அறியும் (விவேக) ஜ்ஞாநம் மனிதனுக்குக் கிடைத்திருக்கிறதென்பதும் உலக தத்துவமே. இவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து நன்கு அறிந்து கொள்வதற்காகவே தான், உலக ச்ருஷ்டி கர்த்தாவாகிய எம்பெருமான், வேதங்களையும் ச்ருஷ்டித்துக் கொடுத்தான். வேத வாக்யங்களை நன்கு அறிந்துகொள்வது வெகு ஸுலபமெனக் கூறமுடியாது. அதன் கருத்துக்களைத் தான் ஆழ்வார்களும், ஆசார்யர்களும் தெளிவான மொழியில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இம்மாதிரியான அறிவுதான் மனிதனை உலகில் ஸுகித்திருக்கும்படி செய்கிறது. அழிவில்லாப் பொருளைத் தேடி அறிபவன் ஸதா ஆனந்தம் அடைகிறான். அழிவுள்ள பொருளை மாத்திரம் அறிபவன் ஸுகம் அடைவதுபோல் தன்னை பாவித்துக்கொண்டு முடிவில் துக்கத்தை அடைகிறான்.

உலகில் உள்ளவர்கள் துக்கத்தை அடைவதை தடுத்து நிலையான ஸுகத்தை அடைய வேண்டும் என்றே நமது ஆசார்ய ச்ரேஷ்டர்கள் பாடுபட்டார்கள்; இப்பொழுதும் பாடுபடுகிறார்கள். உலகில் உள்ளவருக்கு நல்லறிவைப் புகட்டுவதின் மூலம் ஆசார்யர்களினால் இம்மாதிரி நன்மைகளை நமக்குச் செய்யமுடிகிறது. இவ்வழியே நல்வழி என்பதை அவர்கள் நன்குணர்ந்தார்கள்.

ஸ்ரீமந் நாராயணனே பரமாத்மா என்றும் அவனுடைய சரணாரவிந்த ஸேவனமே நமக்கு பரமப்ராப்யம் என்றும் பூர்வாசார்யர்கள் நமக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள். இம்மாதிரியான பூர்வாசார்யர்களில் முக்கியமானவர் தான் ஸ்ரீ பாஷ்யகாரர் எனப்பட்ட பெரும்பூதூர் மாமுனியாகிய ஸ்ரீபகவத் ராமானுஜாசார்யர். இவரைப் பின்பற்றி வந்தவர்களில் இருவர் மிகவும் முக்யமானவர்கள்.

மாறன் மறையு மிராமானுசன் பாஷியமும் தேறும்படி உரைக்கக்கூடிய ஸ்ரீ ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான நிகமாந்த மஹா தேசிகனும் சீர் பெரும்பூதூர் முனியின், அவதாரமாயும் பாஷியத்தைப் பல காலும் பகுத்துரைத்தவருமான ஸ்ரீ மதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுமாவர்.

இவ்விரு மஹான்களும் வேதங்களை, பகவத் க்ருபையால், நன்குணர்ந்து அதன் கருத்துக்களை நமக்கு எடுத்துரைத்தார்கள். வேதத்தினுட் கருத்துக்களை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்துக் கூறியுள்ளார்கள். ஆகவே ஸம்ஸ்க்ருத மொழியில் வேதமும், இனிய தமிழ் மொழி

யில் அதன் கருத்துக்கள் அடங்கிய ஆழ்வார் பாசுரங்களும் நமக்குக் கிடைத்த இருவித வேதங்களாகும்.

இவ்விரு வேதங்களைப் படித்தலும், அவைகளின் கருத்துக்களைக் கொண்ட பாஷ்யாதி வ்யாக்யானங்களைப் படித்தலும், அவைகளை ப்ரவர்த்திப்பதும் நமது முக்கிய கடமைகளாகின்றன. இம்மாதிரியான கடமைகளை நமக்கு நன்கு எடுத்துரைத்து நம்மை நல் வழிக்குக் கொண்டு வருவதற்கு பெரும்பாடு பட்ட ஆசார்யர்களுக்கு நாம் எக்காலமும் கடமைப் பட்டிருக்கிறோம்.

நமது கடமையை நாம் எப்படி நிறைவேற்றுவோம் என்று நம்மில் ஒவ்வொருவரும் யோசித்துப் பார்த்தல் அவசியம். நமக்கு ஜ்ஞானம் புகட்டும் ஆசார்யர்களுக்கு நாம் முதலாவதாகச் செய்யக்கூடியது அவர்களின் பரோபகார சிந்தையைக் குறித்து நாம் சிந்தித்து அவர்களைப் புகழ்வதாகும். அவர்களைப் புகழ்வது மட்டில் நன்மை பயக்காது. அவர்களுடைய ஹிதோபதேசங்களை மனதிற் கொண்டு அதன்படி நடத்தல் மிகவும் அவசியம். ஆகவே வேதங்களையும், வேதாந்தம் முதலிய சாஸ்த்ரங்களையும் நன்கு கற்றலும், அதன்படி நடத்தலும், அவைகளின் கருத்துக்களை மற்றவர்களுக்கு எடுத்து உரைத்தலும் மிகவும் முக்கியமாய் நாம் செய்யவேண்டியவை.

உலகில் ஜனித்த மானிட ராசியிலேயே யாவரும் எதையும் செய்யலாம் என்ற கொள்கை நடை முறையில் ஸாத்யமில்லாதபடியால் தான் பலபாகுபாடுகளுடன் மனித ஸமூஹம் ச்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இதை மறந்து பாகுபாடுகளை நீக்கவேண்டும் என்பது இயற்கைக்கு விரோதமாக நாம் பாடுபடுவதாகும். இயற்கையை நாம் நமக்கு ஸஹாயமாக உபயோகித்துக் சொள்ளமுடியமே தவிர, (இபற்கையை) ஒழித்துவிடமுடியாது.

மனித ஸமூஹத்தில் ஏற்பட்ட பாகுபாடுகளில் ஜாதி, வகுப்பு, வித்யாஸங்கள் முக்கியமானவை. நமது பூர்வாசார்யர்கள் இவைகளை நமக்கு நன்கு எடுத்துக் கூறியுள்ளனர். ஜாதி என்பது இருவகைப்படும். ஜன்மத்தினால் ஏற்பட்டது ஒன்று. **'जन्मना ब्राह्मणो ज्ञेयः.........'** குணம், செயல் இவைகளினால் ஏற்பட்டது ஒன்று. இவைகளில் செயல் முறையால் ஏற்பட்ட ஜாதி (அல்லது) வகுப்பு வித்யாஸத்தை மாற்றிவிட முயற்சிக்கலாம். ஓரளவு வெற்றியும் காணலாம். ஆனால் ஜனனத்தினால் ஏற்பட்ட ஜாதிகளை மாற்றியமைக்க முற்படுவது பயனை அளிக்காது. நமது பூர்வர்களும் அநுமதிக்காத ஏற்பாடு. இந்த தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு தான் நமது ஸமூஹம் வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது.

ஸமீப காலத்தில் நம்மில் பலர் இத்தத்துவங்களைக் குறித்து பல விதமாகப் பேசி வருவதை நாம் கேட்கிறோம்.

„அந்தணர் என்போர் அறவோர்: மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்''—

„எல்லா உயிர்களிடத்தும் உண்மையான அருளைச் செலுத்துவதையே தமக்குரிய கடமையாகக்கொண்டு நடத்தலால், அந்தணர் என்று சொல்லப்படுவோர் துறவறத்தினர் ஆவர்'' ஆகவே ஸமூஹ க்ஷேமத்திற்காக ஒவ்வொரு அந்தணனும் பாடுபடுகிறான் என்றும், அதுவே அவனுடைய கடமை எனவும் ஏற்படுகிறது. உண்மை இப்படி இருக்க „பிராஹ்மணன் என்பது ஒரு ஜாதியைக் குறிப்பிடுவதல்ல. ஸமூஹ க்ஷேமத்திற்காக உழைக்கும் தொண்டை மேற்கொண்டவர்களையே குறிக்கிறது'' என்று விஷயமறிந்த பெரியோர்கள்கூட கூறுவதாக நாம் கேட்கிறோம். („மித்திரன்'' பக்கம் 6, 30-8-55) கர்மாவினால் ஏற்படும் ஜாதி மாறுபடினும், ஜநநத்தினால் ஜாதிகள் இருந்தே தீரும்; அதை அழிக்க முடியாது. தவிர ஸமூஹ „க்ஷேமத்திற்காக உழைக்கும் தொண்டை மேற்கொண்டவர்கள்'' பிராஹ்மணன் செய்யவேண்டிய நற்செயலைக் கடைப்பிடிப்பவராயினும், ஜநநத்தினால் ஏற்படும் பிராஹ்மண ஜாதியை அடைந்துவிடமாட்டார்கள். பிராஹ்மணன் வேதத்தைப் பின்பற்றி, அதைப் பாதுகாக்க கடமைப்பட்டவன். உலகில் உள்ள ஒவ்வொரு உயிரும்

க்ஷேமத்தை அடையவேண்டும் என பிராஹ்மணன் பாடுபடவேண்டும் என்பது தீர்மானிக்கப்பட்ட விஷயம். லோக க்ஷேமத்துக்குப் பாடுபட பிராஹ்மணன் அவசியம். இதே போல் லோக க்ஷேமத்திற்காகவே க்ஷத்ரியன் போன்ற ஒவ்வொரு ஜாதியும் மிகவும் அவசியம் இருக்கவேண்டும். அப்படிக்கின்றி „லோக க்ஷேமம் என்பது ஜாதி, வகுப்பு, பிரதேசம் ஆகிய வரையறைகளுக்கு அப்பாற்பட்டது'' (மித்ரன் 30–8–55) எனக் கூறுவது, ஜாதி, வகுப்பு, பிரதேசம் ஆகிய வரையறைகள் இருப்பின் லோகக்ஷேமம் ஏற்படாது எனக் கூறுவதேயாகும்

‚லோகம்' என்பது இருவகையைக் குறிக்கும். நமக்குப் புலப்படும் இவ்வுலகம் ஒன்று. நமது அறிவுக்கு மட்டில் புலப்படக்கூடியது ‚பரலோகம்' மற்றொன்று. இவைகளில் பரலோகத்தில் யாதொரு விதமான வேற்றுமை வகுப்புக்கள் கிடையாது என்பது உண்மையே. ஆயினும் இவ்வுலகின் க்ஷேமம் என்பது ஜாதி, வகுப்பு, பிரதேசம் ஆகியவரையறைகளுக்கு அப்பாற்பட்டது „எனக்கூறுவது நமது முன்னோர் வகுத்த வழிகளைப் புறக்கணிப்பதேயாகும்.

ஜநநத்தினால் உண்டான பிராஹ்மண்யத்தைக் காப்பாற்றுவதற்காக ஒவ்வொரு பிராஹ்மணனும் லோக க்ஷேமத்திற்காகப் பாடுபட வேண்டும் எனக்கூறுவது நியாயமேயாகும். அப்படிக்கின்றி „ஜாதி, வகுப்பு, பிரதேசம் ஆகிய வரையறைகளுக்கு அப்பாற்பட்டது லோகக்ஷேமம்'' என்றும் „பிராஹ்மணன் என்பது ஒரு ஜாதியைக் குறிப்பிடுவது அல்ல. ஸமூஹ க்ஷேமத்திற்காக உழைக்கும் தொண்டைமேற்கொண்டவர்களையே குறிக்கிறது,'' என்றெல்லாம் கூறுவதென்பது நடைமுறையில் காணப்படும் நமது ஸமூஹத்தையே இழிவுபடுத்துவதேயாகும். அதனால் நமது ஸமூஹத்தில் அமைதி ஏற்படுவதற்கு பதிலாக குழப்பங்களே அதிகரிக்கும் என்பதை நாம் நிச்சயமாகக் கூறமுடியும். இதனால் „லோக க்ஷேமம்'' ஏற்பட்டுவிடுமா!

இஹ, பர ஸுகங்களுக்கென்றே பாடுபட்டு நமக்கு வகுத்துக் கொடுக்கப்பட்ட பூர்வாசார்யர்களின் நல்வழியையே நாம் பின்பற்றி உண்மை ஸுகத்தை எக்காலத்தும், எவ்விடத்திலும் அடைவோமாக.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ அழகியசிங்கரின்
திருவுருவப்படத்திறப்பு விழா

நாளது சித்திரைமீ 11வ யன்று மதுராந்தகம் ஸ்ரீமதஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலையில் நடந்த வார்ஷிகோத்ஸவ ஸமயத்தில் ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்ய நியமநத்தின்பேரிலும் ஸ்ரீமதழகியசிங்கரின் பலமந்த்ராக்ஷதையுடன் ஸ்ரீஸந்நிதி ஸ்ரீகார்யம்ஸ்வாமி ஸ்ரீ. உப. ஜோஸ்யம் வித்வான் ரங்காசார்யஸ்வாமி எழுந்தருளியிருந்து கார்யங்களை செவ்வனே நடத்திவைத்து அநுக்ரஹித்தார்.

அதேதினத்தில் ஸ்ரீமதழகியசிங்கரின் திருவுருவப்படத் திறப்புவிழாவும் நடந்ததால் ஸ்ரீகார்யம்ஸ்வாமி தனது ஆழ்ந்த அநுபவத்தின்மூலம் ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்ய கல்யாணகுணங்களை நன்கு விளக்கி சொற்பொழிவாற்றினர்.

அத்யக்ஷர்

[குறிப்பு:— சென்ற இதழில் பக்கம் 239 – 240ல் வெளியான இந்தச் செய்தியில் மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் எழுதப்பட்ட கடிதம் தவறிவிட்டதால் அச்சிடப் படவில்லை. இந்தப் பிழையைப் பொருத்துக்கொள்ளவேணும்.] ஸம்பாதகர்

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(14-வது ஸம்புடம் 7-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

‘ராஜ்ஞோ தசரதஸ்ய த்வமயோத்யாதிபதே: ப்ரபோ: । தர்மஜ்ஞஸ்ய வதாந்யஸ்ய மஹர்ஷி ஸமதேஜஸ: ॥ விஷ்ணோ புத்ரத்வமாகச்ச’ (ஓ மஹாவிஷ்ணுவே! தருமமறிந்து அநுஷ்டிப்பவனும் உதாரசீலனும் மஹர்ஷிபோன்றவனும் அயோத்யாதிபதியாயும் சக்ரவர்த்தியுமான தசரதராஜனுடைய குமாரனாக தேவரீரவதரிக்கவேண்டும்) என்ற பாலகாண்ட ச்லோகங்கள் ஸ்மரிக்கத்தக்கவை.

दिनकरकुलकमलदिवाकर! தினகரகுலகமலதிவாகர!

தினகரகுல- ஸூர்யவம்சமென்னும், கமல— தாமரைக்கு, திவாகர— ஸூர்யன் போன்ற ஸ்ரீராமபத்ர!

(கரு) ஸூர்யன் உதிப்பதால் மலரும் தாமரைபோல் பகவான் ஸ்ரீராமபத்ரனாக அவதரித்ததால் ஸூர்யவம்சம் மிக்க அழகு பெற்றது. வேதரூபனான ஸூர்யனின் ஸம்பத்தினால் சிறப்புற்ற வம்சம் பகவானின் அவதாரத்தினால் மிகவும் சிறப்படைந்தது என்பது பரமதாத்பர்யம். ஸ்ரீராமாவதாரத்திற்கு ஏற்றதான இவ்வம்சம் பகவான் மூலமாகத் தோன்றியதென ஸ்ரீமத்ராமாயணம் கூறுகிறதாயினும் பகவான் மூலமாக உலகமெலாம் தோன்றியிருப்பதால் ‘பகவத்குல’ என்று விசேஷித்துக்கூற இயலாதாகையாலும் இவ்வம்சத்தில் தோன்றிய மற்றவர்களைக்காட்டிலும் குணங்களால் சிறந்தவன் ஸூர்யனேயாகையாலும் ஸூர்யஸம்பந்தத்தை யிட்டு நம் ஸ்வாமி ‘தினகரகுல’ என்று ஸாதித்தருளினார்.

दिविषदधिपतिरणसहचरणचतुरदशरथचरमऋणविमोचन!

திவிஷததிபதிரணஸஹசரணசதுரதசரதசரமருணவிமோசந!

திவிஷததிபதி— தேவர்களின் அரசனான இந்திரனுடைய, ரண— அஸுரர்களுடன் செய்யும் போருக்கு, ஸஹசரண— உதவியளிப்பதில், சதுர— ஸாமர்த்யமுள்ள, தசரத— தசரதசக்ரவர்த்தியின், சரமருண— கடைசிக்கடனான பித்ருகடனை, புத்ரனில்லாமையை, விமோசந— ஒழித்த ஸ்ரீராமபத்ர!

(கரு) தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யுத்தம் நிகழும்போது தசரதசக்ரவர்த்தி ஸ்வர்க்கலோகம் சென்று இந்திரனுக்கு உதவி புரிந்து யுத்தத்தில் வெற்றியுண்டாக்குவார். அப்படிப்பட்ட பராக்ரமசாலியான தசரதசக்ரவர்த்தியின் குமாரனாக அவதரித்து அவர் தம் புத்ரனில்லாமை யென்னும் பித்ருகடனை ஸ்ரீராமபத்ரன் நீக்கினார். ‘தேவராஜஸ்ய ஸாஹ்யக்ருத்’ (தேவராஜனுக்கு தசரதர் உதவியளிப்பவர்) என்ற ஸ்ரீராமாயணம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. தேவர் கடன், ரிஷிக்கடன், பித்ருகடன் என்று முக்கடன்களைக் கூறும் யஜுர்வேதத்தில் பித்ருகடன் கடைசியில் கூறப்பட்டிருப்பதால் இங்கு ‘சரமருண’ என்று ப்ரயோகித்தருளினார் நம் ஸ்வாமி. தசரதசக்ரவர்த்தியே அக்காலத்தில் தனக்குப் பிதாவாகத் தகுதிபெற்றவரென விஷ்ணு விரும்பினார் என்ற பொருள் கொண்ட ‘பிதரம் ரோசயாமாஸ ததா தசரதம் ந்ருபம்’ என்ற ஸ்ரீமத்ராமாயணம் நினைக்கத்தக்கது.

कोसलसुताकुमारभावकञ्चुकितकारणाकार!

கோஸலஸுதாகுமாரபாவகஞ்சுகிதகாரணாகார!

கோஸலஸுதா— கௌஸல்யாதேவியின், குமாரபாவ— புத்ரனான தன்மையினால், கஞ்சுகித— கவசமிடப்பட்ட— மறைக்கப்பட்ட, காரணாகார— ஜகத்காரணமான தன்மையை யுடைய ஸ்ரீராமபத்ர!

(கரு) பகவான் பக்தர்களிடமுள்ள காருண்யவிசேஷத்தினால் தனக்கே உரித்தான ஜகத்காரணமான தன்மையையும் மறைத்துக்கொண்டு விடுகிறான். ஆகையால் மஹாபாக்ய வதியான கௌஸல்யாதேவியின் குமாரனாக அவதரித்தான். இங்கு 'கௌஸல்யாஸுப்ரஜா ராம' என்ற ராமாயணமும் 'மன்னுபுகழ் கோசலைதன் மணிவயிறு வாய்த்தவனே' என்ற குலசேகராழ்வாரின் திவ்யஸூக்தியும் நினைக்கத்தக்கவை.

இதுவரை ஸ்ரீராமாவதாரமஹிமை சுருங்கக் கூறப்பட்டது. இனி 'கௌமாரகேளி' என்று தொடங்கி 'பவதபநதாபிதபக்தஜநபத்ராராம' என்று முடியும் ஸம்போதநபத சூர்ணிகைகளால் துஷ்டர்களை நிரஸநம் செய்து ஸாதுக்களைக் காப்பாற்றுவது என்ற பகவதவதார பரமப்ரயோஜனம் வர்ணிக்கப்படுகிறது.

कौमारकेलिगोपायितकौशिकाध्वर!

கௌமாரகேளிகோபாயிதகௌசிகாத்வர!

கௌமாரகேளி— பாலலீலையினால், கோபாயித— ஸம்ரக்ஷணம் செய்யப்பட்ட, கௌசிக— விச்வாமித்ரமுனிவரின், அத்வர— யாகத்தையுடைய ஸ்ரீராமபத்ர!

(கரு) இளமையில் ஸ்ரீராமன் எவ்வித சிரமமுமில்லாமல் இலாகவமாக விச்வாமித்ர முனிவரின் யாகத்தை ஸம்ரக்ஷித்தான். மாரீசனைக் கடலிலெறிந்தும் ஏனைய இராக்கதர்களை அழித்தும் யாகஸம்ரக்ஷணம் செய்தது ஸ்ரீராமபத்ரனுக்குப் பந்துவிளையாட்டுபோன்ற தென்பதைக் குறிக்க 'கௌமாரகேளி' என்று கூறப்பட்டது.

रणाध्वरधुर्यभव्यदिव्यास्त्रबृन्दवन्दित!

ரணாத்வரதுர்யபவ்யதிவ்யாஸ்த்ரப்ருந்தவந்தித!

ரணாத்வர— ராக்ஷஸர்களுடன் போரிடல் என்ற யாகத்தை, துர்ய— முடிக்கவல்லவையும், பவ்ய— க்ஷேமமளிப்பவையுமான, திவ்யாஸ்த்ர— சிறந்த அஸ்த்ரங்களின், ப்ருந்த— கூட்டத்தினால், வந்தித— வணங்கப்பட்ட ஸ்ரீராமபத்ர!

(கரு) யுத்தகளத்தில் மிகவும் துணை புரியக்கூடிய உயர்ந்த திவ்யாஸ்த்ரங்களை விச்வாமித்ரமுனிவரிடமிருந்து ஸ்ரீராமபத்ரன் உபதேசமூலமாகப் பெற்றான். விதிப்படி நடத்தும் போர், யாகம்போல திவ்யகதி யளிக்கும் தன்மையுடையதாகையால் யுத்தத்தை யாகமெனக் கூறியருளினர். இங்கு 'பவ்ய' என்ற பதத்திற்கு 'வச்யமான' என்றும் பொருள் கொள்ளலாம். இவ்வர்த்தத்திற்கு ப்ரமாணமாக 'இமே ஸ்ம பரமோதாரா: கிங்கராஸ்தவ ராகவ' (ஹே ராம, மிக்க உதாரகுணமுள்ள திவ்யாஸ்த்ரங்களாகிய நாங்கள் தேவ

ரீரின் ஏவலைச் செய்யும் கிங்கரர்களாக எப்போதுமிருப்போம்) என்ற ஸ்ரீமத்ராமாயணம் கொள்ளத்தக்கது.

प्रणतजनविमतविमथनदुर्ललितदोर्ललिततनुतरविशिखविताडनविघटितविशरारुशरारुताटकाताटकेय

ப்ரணதஜநவிமதவிமதநதுர்லலிததோர்லலிததநுதரவிசிகவிதாடந விகடிதவிசராருசராருதாடகாதாடகேய!

ப்ரணதஜந- ஆச்ரிதஜநங்களின், விமத- விரோதிகளை, விமதந- அழிப்பதில், துர்லலித- மிக்க உக்ரமான, தோ:- புஜத்தில், லலித- ப்ரகாசிக்கிற, தநுதர- மிகச் சிறிய, விசிக- பாணத்தின், விதாடந - அடித்தலால், விகடித- பிரிக்கப்பட்டவர்களும், விசராரு- தங்களை எதிர்த்து ஹிம்ஸிப்போரில்லாதவர்களும், சராரு- ஹிம்ஸகர்களுமான, தாடகா தாடகேய- தாடகையையும் அவள் மகனான மாரீசனையுமுடைய ஸ்ரீராமபத்ர!

(கரு) அடியார்களின் விரோதிகளை நிர்மூலமாக்குவதில் ஸந்நத்தமான திருத்தோள் பூண்ட ஸ்ரீராமபத்ரன், தங்களுக்கு ஹிம்ஸகர்களில்லாதபடியிருந்து ஜகத்தை ஸதா ஹிம்ஸித்துவந்த தாடகையையும் அவள் மகன் மாரீசனையும் சிறிய பாணத்தினால் அடித்துப் பிரித்து வைத்தான். இயற்கையாக என் வெருப்புக்குப் பாத்திரமானவன் கிடையாது என்ற பொருள் கொண்டு 'நமே த்வேஷ்யோஸ்தி' என்று பகவான் கீதையில் கூறியிருக்கிறபடியால் ஆச்ரிதவிரோதிகளே பகவத்விரோதிகள்; அவர்களைத் தன் புஜபலத்தினால் பகவான் ஒழித்துவிடுகிறான் என்பது 'மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா' என்ற பெரியாழ்வார் ஸ்ரீஸூக்தியினால் ஸ்பஷ்டமாகிறது. ஸ்ரீராமன் சிறிய பாணத்தின் அடித்தலாலேயே தாடகையைக்கொன்று மாரீசனைப் பிரித்துவைத்தானென்பதால் அவன் பராக்ரமாதிசயம் வர்ணிக்க இயலாதது என்பது புலப்படும். இங்கு தாடகையைக் கொன்றதும், மாரீசனை மாநவாஸ்த்ரத்தினால் கடலிலெறிந்ததும் கூறப்பட்டிருந்தாலும், விச்வாமித்ர யாகஸம்ரக்ஷணம் செய்யப்புகும் ஸ்ரீராமன் அவ்வியாகத்திற்கு விக்கினமிழைப்பவர்கள் யாவரையும் ஒழித்தான் என்று கூறுவதில் நோக்குடைய நம் ஸ்வாமிக்கு 'ஸ்ரீராமன் ஸுபாஹுவை ஆக்நேயாஸ்த்ரத்தினால் கொன்றதும், ஏனைய ராக்ஷஸர்களை வாயவ்யாஸ்த்ரத்தினால் ஒழித்ததும்' விவக்ஷிதமே. விச்வாமித்ரமுனிவர் ஸித்தாச்ரமம் சென்று யாகம் செய்வதற்கு முந்தியே நடுவழியில் தாடகையை ராமன் விச்வாமித்ரரின் கட்டளையினால் கொன்றானென்றும், இதைக் கண்டு ஸந்தோஷமடைந்த தேவேந்த்ரனின் ப்ரார்த்தனைக்கிணங்கி விச்வாமித்ரர் திவ்யாஸ்த்ரங்களை ஸ்ரீராமனுக்கு உபதேசித்தாரென்றும், பிறகு ஸித்தாச்ரமம் சென்று மஹர்ஷி யாகம் செய்ய ஆரம்பிக்கும்போது அதற்கு இடையூறு விளைவித்த ஸுபாஹு மாரீசன் முதலிய ராக்ஷஸர்களை பலவிதமாக ஹிம்ஸித்து ஸ்ரீராமன் யாகரக்ஷணம் செய்தார் என்றும் ஸ்ரீமத்ராமாயண கதாக்ரமமிருக்கச்செய்தேயும், நம் ஸ்வாமி, யாகஸம்ரக்ஷணம், திவ்யாஸ்த்ர ப்ராப்தி, தாடகாஸம்ஹாரம் என்றிப்படி மாறுபட்ட க்ரமத்தை இங்கு ஸாதித்திருப்பதற்குக் காரணம் யாதெனில்; அவதாரத்தின் முக்யப்ரயோஜனம் ஸாதுஜநரக்ஷணமாகையால் முதலில் விச்வாமித்ரயாகரக்ஷணத்தையும், துஷ்டநிக்ரஹமதற்கு உபகாரகமாகையால் அதன் பின்பு தாடகாநிரஸநத்தையும், துஷ்டநிரஸநத்திற்கு திவ்யாஸ்த்ரலாபம் துணை செய்வதால்

ஸநத்திற்கு முன்பு திவ்யாஸ்த்ரலாபத்தையும் நிவேசநம் செய்து ஸாதித்திருப்பது மிகவும் பொருத்தமாயிருப்பதே. மேலும் தங்கள் ப்ரபந்தநாயகனை வர்ணிக்கப்புகும் மஹாகவிகள் நாயகனின் உத்பத்தி, பாலலீலை, வித்யாப்யாஸம், வித்யாநைபுண்யம், யௌவநம், விவாஹம் என்றிவ்வாறு க்ரமமாக வர்ணிப்பார்கள். ஆகையால் நம் கவிஸிம்ஹமான குருமணியும் அவ் வழக்கையொட்டி விச்வாமித்ரயாகஸம்ரக்ஷணத்தை பாலலீலையாகவும், திவ்யாஸ்த்ரலாபத்தை வித்யாப்யாஸமாகவும், தாடகாதிஸம்ஹாராதிகளை அவ்வித்யாநைபுண்ய கார்யங்களாகவும் திருவுள்ளம் பற்றி வர்ணித்தருளினர். (தொடரும்)

வ்யாஸம் எழுதுவோருக்கு விஜ்ஞாபநம்

ப்ரதிமாதம் நம் பத்ரிகைக்கு விஷயதானம் செய்து உபஹரிக்கும் பண்டிதவரர்கள், தாங்கள் எழுதியனுப்பும் வ்யாஸங்களை நன்றாக புரியும்படியும், காகிதத்தின் ஒருபக்கத்தில் மட்டுமே எழுதியனுப்பும்படியும், நம் பத்ரிகையில் 2 அல்லது 3 பக்கங்களுக்குமேற்படாமல் சுருக்கமாக எழுதியனுப்பும்படியும் ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். தொடர்ச்சியாக வரும் வ்யாஸத்தை எழுதியனுப்புவோர் **வ்யாஸம் முழுவதையும் பூர்த்திசெய்து முன்ன தாகவே அவச்யம் அனுப்பிவிடவேணுமாய் ப்ரார்த்திக்கின்றோம்.**

சந்தாதாரர்களுக்கு ஓர் விஜ்ஞாபநம்

நமது பத்ரிகையின் சந்தாதாரர்கள் 1955-ம் வருஷம் முடிய தாங்கள் செலுத்த வேண்டிய சந்தாதுகையை தயவுசெய்து 30-9-55 க்குள் அனுப்பிவைப்பதுடன், தத்தம் ஸ்னேஹிதர்களையும் தெரிந்தவர்களையும் புதிய சந்தாதாரர்களாகச் சேரும்படிசெய்து உ[illegible] புரியவேண்டுகிறோம்.

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸ்ரீ கிருஷ்ணன் :— தினம் ஆபரணம் பூணுவதில்லையா? ஆடை உடுப்பதில்லையா? இதை இப்போது சிறப்பாகச் சொல்வதேன்?

நாயகப்பெண் :— நாடு புகழும் பரிசினால் நன்றாக பல்கலனும் அணிவோம், ஆடையுடுப்போம்.'' ஸாதாரணமான தினங்களில் சில ஸாதாரண ஆபரணங்களையும் ஸாதாரண ஆடையுமே கூட தரித்திருப்பதுண்டு. நாளைய தினம் மார்கழி நோன்பின் பாரணை தினமாதலின் விலையுயர்ந்த எல்லா உத்தம ஆபரணங்களையும் உத்தம ஆடைகளையும் தரிப்போம். பார்த்தவர்கள் யாவரும் "ஆடையாபரணங்களுக்கேற்ற அழகு. அழகுக்கேற்ற ஆடையாபரணங்கள். எவ்வளவு பொருத்தமாக எல்லாம் அமைந்திருக்கின்றது. அலங்காரம்தான் எவ்வளவு நன்றாகச் செய்யப்பட்டிருக்கின்றது. இந்தக் குழந்தைகளுக்கு இவ்வித அலங்காரம் செய்தவர்கள் இந்தக் கலையில் வெகு கைதேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். இந்தக் குழந்தைகளுக்குத்தான் எம்பெருமானுடைய கைங்கர்யத்தைச் செய்வதில்எவ்வளவு உத்ஸாஹம்; எவ்வளவு ஸந்தோஷம்'' என்றிப்படிப் புகழும்படி எல்லாவற்றையும் விசேஷமாகத் தரிப்போம்.

ஸ்ரீ கிருஷ்ணன் :— அதற்குப் பிறகு?

நாயகப்பெண் :— அதன் பின்னே பாற்சோறு மூட நெய்பெய்து. திவ்யமான க்ஷீரான்னம் சமைத்து அது மூடும்படியாக அவ்வளவு நெய் அதில் வார்ப்போம்.

ஸ்ரீ கிருஷ்ணன் :— ஸரி. அப்படி நெய் வார்ப்பீர்கள். அதன் பிறகு அதைச் சாப்பிடுவீர்கள். நான் கேட்ட கேள்விக்கு மறுமொழி கூறாமலே வேறு எதையோ சொல்லிக் கொண்டு போகின்றாயே.

நாயகப்பெண் :— அப்படியன்று கிருஷ்ணா. மறுமொழிதான் கூறுகின்றேன் கேட்டருள வேண்டும். முழங்கை வழிவார கூடியிருந்து குளிர்ந்து. அந்த உத்தமமான க்ஷீரான்னத்தைத் திருவுள்ளம் பற்றி நீ அமுது செய்ய வேண்டும். உன்னோடு கூடப் புசிக்க விரும்பி நாங்களும் அதைக் கையில் வாங்கிக்கொள்வோம். ஆனால் உன்னுடைய திவ்ய ஸேவையிலும் பரிஹாஸமாகவும் உபதேசமாகவும் கதையாகவும் நீ பேசும் பேச்சிலும் ஈடுபட்டுப் பரவசர்களாய் அதைப் புசிக்கவேண்டுமென்பதையே மறந்துவிடுவோம். கையிலேயிருக்கும் அந்த க்ஷீரான்னத்திலிருந்து நெய் வழிந்து முழங்கை வழியாக வந்து கொண்டேயிருக்கும். அது அப்போது எங்களுக்குத் தெரியாது. பிறகு தான் தெரியும். உன் அநுபவத்தில் அப்படி நாங்கள் மூழ்கியிருப்போம். தாபம் என்பது சிறிதுமில்லாமல் க்ரீஷ்ம காலத்தில் பெரும் மடுவில் அவகாஹித்து ஆழ்ந்தால் எப்படியோ அப்படிக் குளிர்ந்திருப்போம்.

ஸ்ரீ கிருஷ்ணன் :— இன்று மாத்ரமன்றி நாளை நடக்கும் பாரணை ஸமயத்திலும் நான் வந்து கூடவிருக்கவேண்டுமென்கிறீர்களா?

நாயகப்பெண் :— ஆம் கிருஷ்ணா. அதுவே தான் நாங்கள் அபேக்ஷிப்பது. அது தான் நாங்கள் உன்னிடத்திலிருந்து பெற விரும்பும் ஸம்மானம்.

இவ்விதமான ஸந்தர்ப்பத்தில் மற்றவர்களாயிருந்தால் உயர்ந்த ஒரு ஆடையோ ஆபரணமோ வேண்டுமென்று கேட்டிருப்பார்கள். இக்கந்யகைகளோ வெனில் லோகோத்தர விவேகம் பெற்றுப் பரமை காந்தி நிலையில் இருக்கின்றவர்களாகையால் அவ்விதமாக வஸ்து ஒன்றையும் அபேக்ஷிக்காமல் மேலும் பகவதநுபவத்தையே விரும்பிக்கேட்டார்கள். இவ்விதமான ஸம்மானம் வேண்டுமென்று அவர்கள் விரும்பியதில் மிகவும் ப்ரீதனான ஸ்ரீ கிருஷ்ணன் 'அப்படியே வருகின்றேன். உங்களோடு கூட விருக்கின்றேன்.' என்று உடனே அங்கீகரித்தார். பெண்கள் பேராநந்தமடைந்தார்கள்.

28. கறவைகள்

வேண்டிய வஸ்துக்களைத் தந்து தானும் கூடவே இருந்து ஸ்ரீ கிருஷ்ணன் மார்கழி நோன்பை நிறைவேற்றி வைக்கவேண்டுமென்று ப்ரார்த்திப்பதற்காகவே கோப கந்யைகள் அவரிடம் சென்றார்கள். அவர்களுடைய சாதுர்யத்தினால் மிகவும் மகிழ்வுற்ற ஸ்ரீ கிருஷ்ணன் அவர்கள் கேட்ட வஸ்துக்களையெல்லாம் தருவதாக அங்கீகரித்தது மட்டுமல்லாமல் ஒரு ஸம்மானமும் கொடுப்பதாக அநுக்ரஹம் செய்தார். கூடவிருந்து மறுநாள் பாரணையையும் நடத்தி வைப்பதே அந்த ஸம்மானமாக இருக்கட்டுமென்று கந்யைகள் ப்ரார்த்திக்க 'அப்படியே' என்று அதை அவர் அங்கீகரித்தார். இதோடு நோன்பு விஷயமாக அப்பெண்கள் எம்பெருமானிடத்தில் செய்ய வேண்டிய விக்ஞாபநம் முடிந்துவிட்டது. ஆகிலும் வெகு புத்திமதியாய், உத்தம தத்வ விவேகம் பெற்றவளாய், எம்பெருமானிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறையை உள்ளபடி அறிந்தவளான நாயகப்பெண்ணுக்கு அப்போது ஒன்று தோன்றிற்று. ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவனான ஸாக்ஷாத் ஸர்வேச்வரனிடத்தில் இவர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்கள் இனி இவ்வுலகில் எவருமில்லை என்னும்படியிருக்கிற தாங்கள் போய் பல படி பேசித் தமது கோரிக்கையை விண்ணப்பம் செய்ததில் எத்தனை தவறுகள் இருந்திருக்கும். அபாரமான தனது வாத்ஸல்யத்தினால் எம்பெருமான் அவற்றைப் பொருள் படுத்தமாட்டான் என்பது உண்மையாயினும் அடியார்கள் தமது ஸ்வரூப ஸ்வபாவங்களுக்கேற்றபடி அவனிடத்தில் அக்குற்றங்களை க்ஷமிக்கும்படி ப்ரார்த்திக்கவேண்டியது மிக அவச்யம். முறைப்படி பகவதாராதநத்தைச் செய்து முடித்த பிறகு பெரியோர்கள்

> "உபசாரமென்று பேரிட்டு தினந்தோறும்
> பலபல அபசாரங்களையே செய்துவருகின்
> றேன். ஓ புருஷோத்தம, நீ அவற்றைப்
> பொறுத்துக்கொள்ளவேண்டும்"

என்று க்ஷாமணம் செய்வது வழக்கம்.

यद्वोवयं प्रमिनाम व्रतानि
विदुषां देवा अविदुष्टरासः ।
अग्निष्टद्विश्वमापृणाति विद्वान्
येभिर्देवान् ऋतुभिः कल्पयाति ॥

என்பது ஒரு மந்த்ரம். "ஓ தேவர்களே, உங்களுடைய பூஜையான இந்த யஜ்ஞங்களை ஒன்றுமறியாத நாங்கள் நிச்சயமாய்க் கெடுத்திருப்போம். மிக அறிவாளிகளான உங்களுக்கு அது புலப்படாமல் இருக்காது. அக்குறைகளை எல்லாம் போக்கி ஸர்வஜ்ஞனான அக்நிதேவன் முறைப்படி உங்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்வான்" என்பது அம்மந்திரத்தின் பொருள். ஆகவே அநாதியாய் வந்த இந்த முறைப்படித் தாங்கள் எம்பெருமானிடத்தில் தமது குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளும்படி ப்ரார்த்திக்க வேண்டியது மிக அவச்யம் என்று நிச்சயித்து அப்படியே ப்ரார்த்தித்தாள்.

விச்வரூபஸேவையை ஸாக்ஷாத்தாகப் பெற்ற அர்ஜுனன், முன் ஸ்ரீ கிருஷ்ணனை ஸாமான்யமாகஎண்ணி ஓக்ருஷ்ணா! ஓ யாதவா! ஏ நண்பா!என்று அழைத்ததுமுதலானது எவ்வளவுபெருந்தவறுஎன்பதை உணர்ந்துவருந்தி அவற்றை எல்லாம் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டினான். பகவானுடைய பெருமையை உள்ளபடி அநுபவித்தவுடனே பக்தர்களுக்குத் தம்முடைய சிறுமையும், தாம் அவன் விஷயத்தில் செய்வதெல்லாம் அவன் பெருமைக்குச் சிறிதும் ஏற்காத அபசாரச் செயலே என்பதும், அதற்காக அவனிடத்தில் க்ஷமை வேண்டுவது மிக அவச்யமென்பதும் தோற்றுவது இயற்கை. இது இப்போது கோப குமாரிகளிடத்திலும் காணப்படுகின்றது.

நாயகப்பெண் :- கோவிந்தா, சீறியருளாதே. நீ எங்களிடத்தில் கோபித்துக்கொள்ளக் கூடாது. கோவித்துக்கொண்டு "இனி நீங்கள் இங்கு வாரதீர்கள். இனி உங்களுக்கும் எனக்கும் ஸம்பந்தமில்லை" என்றிப்படி எங்களை உபேக்ஷிக்கக் கூடாது. நீ சோபித்தாலும் அதுவும் அருள் தான். பரசுராம உருவத்தில் பல பல தடவை க்ஷத்ரிய ஸம்ஹாரம் செய்ததும் அருளினாலேயே என்றல்லவோ பெரியோர் கூறியிருக்கின்றனர். ஆகிலும் அவ்விதமான அருளை நீ இப்போது எங்கள் விஷயத்தில் செய்யக்கூடாது. இதற்கு மாறாக நாங்கள் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்தருள வேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணன் :- நீங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே. உங்கள் விஷயத்தில் நான் சீறுவதற்கு என்ன காரணம் இருக்கின்றது ?

நாயகப்பெண் :- அப்படியன்று கிருஷ்ணா, பல குற்றங்களைச் செய்திருப்போம். அவற்றில் ஒன்றைக் குறிக்கின்றேன் கேள்:

உன்தன்னைச் சிறுபேர் அழைத்தனவும். உன் பெயர்களைச் சொல்லி உன்னை அழைத்தோமே அதுவே பெருந்தவறன்றோ. வஸிஷ்டரையோ தசரத சக்ரவர்த்தியையோ எவனோ ஒருவன் அணுகி ஏ வஸிஷ்டா, ஓ தசரதா, என்று ஸம்போதித்தானாகில் அது எவ்வளவு தவறு. அது போன்றதேயன்றோ நாங்கள் இப்போது செய்திருப்பது. உனது திருநாமங்களுக்கு எவ்வளவோ பெருமை உண்டு. அதனால் அவையெல்லாம் மிகப்பெரியவை. ஆகிலும் ஒன்றுமறியாத நாங்கள் அவற்றைச் சொல்லி உன்னை அழைத்தால் அவை சிறுமை பெருகின்றன.

பெரியோர்கள் இருக்குமிடத்தில் சிறியோர் போகக்கூடாது. பெரியோர்களே சில ஸமயம் அநுக்ரஹ புத்தியோடு சிறியோர் இருக்குமிடங்களுக்கு வரலாம். அப்போது அவர்களுக்குத் தக்க உபசாரம் செய்து வீற்றிருக்கச்செய்து அவர்கள் என்ன அருளிச்செய்கின்றார்கள் என்று எதிர்பார்த்திருப்பதல்லாமல் சிறியோர் தாமாக ஒன்றும் பேசக்கூடாது. பெரு மூச்சுகூட விடக்கூடாது, என்று சாஸ்திரங்கள் உபதேசிக்கின்றன. அப்படியிருக்க நாங்கள் வந்து பலபடி பெயரிட்டுக் கூப்பிட்டு நித்ராபங்கம் செய்து பல வேண்டுதல்களைச் செய்து இவ்வளவு தைர்யமாக உன்னிடத்தில் நடந்து கொண்டதெல்லாம் கொடிய அபசாரந்தானே. இப்படி நாங்கள் அபசாரங்களைச் செய்திருக்கின்றோமாயினும் அவற்றைப் பற்றி நீ எங்களை உபேக்ஷிக்கக்கூடாது. அவைகளைப் பொறுத்து அநுக்ரஹிக்கவேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணன் :- செய்துவிட்டுப் பொறுத்துக்கொள் என்று ப்ரார்த்திக்கின்றீர்களே. செய்யாமலே இருந்தால் ரொம்ப நல்லதாயிற்றே. நீங்கள் வெகு புத்திமதிகளன்றோ. இது தெரிந்திருக்கலாமே.

நாயகப்பெண்:- அது உண்மைதான், செய்யாமலே இருக்கலாம். ஆகிலும் என் செய்தோமெனில் விண்ணப்பிக்கின்றேன். கேட்டருளவேணும். அறியாத பிள்ளைகளோம், அன்பினால் செய்தோம். நோன்பு நோற்பதில் அதிக ஆஸ்தை வைத்துவிட்டோம். அபிநிவேசம் ஏற்பட்டுவிட்டது. எப்படியும் அதைச் செவ்வையாக நிறைவேற்றவேண்டுமென்ற ஒரே நோக்கமிருந்தது. அதனால் உன்னிடத்தில் வந்து இவ்வாறு நடந்துகொண்டோம். இப்படி ஸர்வேச்வரனிடத்தில் நடப்பது நமக்குத் தகாதே, பெரும் அபசாரமாயிற்றே என்ற எண்ணம் இல்லாமல் போயிற்று. ஆஸ்தை உண்டாகிவிட்டால் யுக்தாயுக்தங்களை ஆலோசனை செய்து அறியமுடியாத சிறு பிராயத்திலன்றோ நாங்கள் இருக்கின்றோம்.

மேலும் உன்னைக் கண்டவுடனே, எங்கள் நெஞ்சு உடம்பு எல்லாம் பரவசமாகின்றன. உனக்கு எங்களிடத்திலிருக்கும் அன்பினால் எங்களுக்கு உன்னிடத்திலிருக்கும் அன்பு பொங்கி எழுகின்றது. அதனால் எங்களோடு ஒருவனாகவே உன்னைப் பாவித்து விடுகின்றோம். அதற்குத் தக்கபடி பேச்சும் நடத்தையும் அமைந்து விடுகின்றன.

இப்படி இக்காரணங்களால் அபசாரங்கள் நேர்ந்துவிட்டன. ஆயினும் நீ அவற்றைப் பொறுத்து எங்களை உபேக்ஷிக்காமல் இருக்க வேண்டும். மிகுந்த வாத்ஸல்ய முள்ளவனன்றோ நீ. நாங்கள் எத்தனை குற்றம் செய்தாலும் நீ எங்களை எவ்விதத்திலும் உபேக்ஷை செய்யக்கூடாது என்பதற்கு விசேஷ காரணமுமுண்டு. அதையும் விண்ணப்பம் செய்கின்றோம் கேட்டருள்.

நாங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை உள்ளவர்கள் எனில் கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம் கறவை பசுக்களே எங்கள் செல்வம். அவற்றை மேய்த்துக் காப்பாற்ற வேண்டியதே எங்களுடைய முக்கியத் தொழில். ஸூர்யன் உதிப்பதற்கு முன்னேயே எழுந்திருந்து விதிப்படி காலைக்கடன்களைச் செய்து முடித்து விட்டு முதல் நாள் ராத்ரியே பகவானுக்கு நிவேதனம் செய்து கட்டி வைத்த அன்னத்தை எடுத்துக்கொண்டு, பால் கறந்த பிறகு பசுக்களை அவிழ்த்துவிட்டு மேய்வதற்காக அவைகள் காட்டுக்குச் செல்ல அவற்றின் பின் நாங்கள் செல்வோம். 'நாங்கள் முன்னே போ[illegible] நாங்கள் போகும் வழியே எங்க[illegible] வருவது'

16650

என்பதில்லை. அவைகள் தம்மிஷ்டப்படி முன் செல்ல அவ்வழியே அவற்றின் பின் நாங்கள் செல்வது வழக்கம். எங்களுடைய செல்வமாகிய அவைகள் யதேஷ்டமாய் ஸஞ்சரிக்கவேண்டும் அதற்குத் தடை செய்யக்கூடாதென்பது எங்கள் உத்தேசம். அவற்றினிடத்தில் எங்களுக்கு அவ்வளவு கௌரவம். அவை காட்டுக்குச் சென்று செழித்து வளர்ந்திருக்கும் புல்லை மேய்ந்து வர நாங்கள் காட்டு மிருகங்களால் அவற்றுக்கு அபாயம் ஒன்றும் வாராதபடி அவற்றுடன் கூடவே இருந்து காத்து, ஈக்கள் கடிக்காதபடி ஓட்டி, பிறகு அவை நீர் குடித்து நிழலிற் படுத்து அசை போட்டுக்கொண்டிருக்க மாத்யான்னிகத்தைச் செய்து விட்டு அன்னத்தைப் புசிப்போம். இப்படிக் கறவைகளுடன் கானம் சேர்ந்து உண்கின்றவர்கள் நாங்கள். பசுக்கள் எழுந்து மறுபடியும் மேய்ந்து நீர் குடித்து ஸூர்ய அஸ்தமய ஸமயத்தில் காட்டிலிருந்து புறப்பட்டு வர அவற்றின் பின் வந்து வீடு சேர்வோம். இப்படி விழித்துக்கொண்டிருக்கும் காலமாகிய பகலெல்லாம் எங்களுக்குக் காட்டிலேயே கழியும். ஆகவே நாங்கள் 'காடு வாழ் சாதி'யேயாகின்றோம். ஜநங்களில் பலர் நகரங்களில் வாழ்வர் மற்றவர் க்ராமவாஸிகள். இவர்களில் க்ராமவாஸிகளைக் காட்டிலும் மற்றவர்கள் பழக்க வழக்கங்களில் சீர்மை பெற்றிருப்பர். இதை 'நாகரிகம்' என்பர். க்ராமவாஸிகளுக்கு இந்த 'நாகரிகம்' தெரியாதாகையால் இவர்கள் ஸமூஹத்தில் கீழ்ப்படியில் இருப்பதாகக் கருதப்படுவர். 'க்ராம்யம்' (குப்பைக் காட்டு வாழ்வு உள்ளது) என்று இவர்களைப்பற்றி வழங்குவர். இவ்விதமான க்ராமவாஸிகள் கூட அல்லோம் நாங்கள். வெறும் அரண்ய வாஸிகள். **'ज्ञानेन हीनः पशुभिस्समानः'** (அறிவில்லாதவன் நான்குகால்ப்ராணிகளுக்குஸமமானவன்) எனப்பட்டிருக்கிறது. இப்படி அறிவில்லாமைக்கு உபமானமாகக் காட்டப்பட்ட பசுக்களையே தைவமாகவும் குருக்களாகவும் கொண்டு அவற்றோடு கூடவே காலம் முழுவதையும் கழிக்கும் எங்கள் குலம் அறிவொன்றுமில்லாத ஆய்க்குலம் ஆகும். சாஸ்த்ரங்களைக் கற்று உன்னுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை உள்ளபடி அறிந்து கர்ம ஜ்ஞானம் பக்தி ப்ரபத்தி என்றிப்படியுள்ள உபாயங்களை அநுஷ்டித்து உன் அருளைப் பெறச் சிறிதும் யோக்யதை இல்லாத குலம் இது. இதில் உன் தன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம். இக்குலத்தில் வந்து நீ பிறந்திருக்கின்றாய். இதற்குக் காரணமான ஏதோ ஒரு புண்ணியம் எங்கள் குலத்திற்கு இருந்திருக்கின்றது. அஜ்ஞாத ஸுக்ருதம், யாத்ருச்சிக ஸுக்ருதம், ஆநுஷங்கிக ஸுக்ருதம் என்றாப்போலுள்ள ஏதோ ஒரு புண்ணியத்தை எங்கள் குலத்தைச் சேர்ந்த யாரோ ஒருவர் செய்திருக்கவேண்டும். அதை வ்யாஜமாகக் கொண்டு நீ இப்போது இக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றாய்.

ஸ்ரீ கிருஷ்ணன் :– அப்படியேயிருக்கட்டும். அதனாலென்ன?

நாயகப்பெண் :– குறைவொன்றுமில்லாத கோவிந்தா. இக் குலத்தில் பிறந்து கோவிந்தன் என்ற திருநாமம் புதுப் பொருள் கொள்ளும்படி ஒரு கோபாலனாக விளங்குகின்றாயே, இது எதற்காக? உனக்கு ஒரு குறை இருந்து அதைத் தீர்த்துக்கொள்வதற்காகவா? அன்றே. அவாப்த ஸமஸ்தகாமனான ஸர்வேச்வரன் அன்றோ நீ. ஆகையால் உன் குறையை நீக்கிக்கொள்வதற்காக நீ இக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றாய் என்பதில்லை. உனக்கு ஸ்வப்ரயோஜனம் ஒன்றும் இதில் இல்லை. இக் குலத்தை அநுக்ரஹிப்பதற்காகவே இதில் உன் பிறப்பு.

'अनवाप्तमवाप्तव्यं न ते किंचन विद्यते।
लोकानुग्रह एवैको हेतुस्ते जन्मकर्मणोः॥'

என்றல்லவோ அறிவாளிகள் உண்மையை அறிவித்திருக்கின்றனர். ஆகவே எங்களை ஆட்கொண்டு அநுக்ரஹம் செய்வதற்காகவே எங்களுடைய இந்த ஆய்க்குலத்தில் அவதரித்த நீ எங்களை எக்காரணத்தினாலாவது உபேக்ஷிக்கக் கூடுமோ? இக்குலத்தில் அவதாரம் செய்ததின் ப்ரயோஜனமேயன்றோ அப்போது ஸித்திக்காமல் போகும். மற்றொன்றும் விஜ்ஞாபிக்கின்றோம். க்ருபையாய் கேட்கவேண்டும்.

(தொடரும்)

ஸ்ரீ:

பட்டாபிஷேக ஸ்ரீமுகம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

பின் இஜ்யாஸங்கல்பம் செய்துகொண்டு மாத்யாஹ்னிக காலத்தில் சிலநாள் கருட நதியிலும், சில நாட்கள் ஸ்ரீதேசிகன் திருமாளிகையில் ஸ்ரீதேசிகனாலேயே கட்டப்பட்ட கிணற்றில் நீராடுவதும் வழக்கம். அப்போதுதான் '**वेदान्तगुरुणा क्लृप्ते कूपेऽस्मिन्विरजोपमे। स्नातो वेदान्तनिष्णातो भवत्येव न संशयः॥**' என்று ஒரு ச்லோகத்தைச்செய்தருளி அநுஸந்தித்துக்கொண்டு நீராட்டம் செய்தருளியாகும். பின் மடத்திற்கெழுந்தருளி ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனுக்கு மத்யாஹ்ன மங்கள ஹாரத்தி செய்தருளி தீர்த்தம் முதலியதை ஸ்வீகரித்து பின் பிக்ஷாடன ஸங்கல்பபூர்வகம் பிக்ஷாடனம் செய்தருளி ஸமாபனம் செய்துவிட்டு ஸ்வாத்யாய காலத்தில் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரகாலக்ஷேபத்திற்காக வந்திருக்கும் ஸ்வாமிகளுக்கு அந்த க்ரந்தத்தை காலக்ஷேபம் ஸாதிப்பது வழக்கம். பின் ஸாயம் ஸ்நாநத்திற்கு கருடநதிக்கு எழுந்தருளி அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீதேவநாதனையும் ஸ்ரீதேசிகனையும் மங்களாசாஸனம் செய்துவிட்டு பாகவதகோஷ்டியுடன் யதிராஜஸப்ததி அநுஸந்தானத்துடன் மடத்திற்கு எழுந்தருளுவதாயிருக்கும். அப்போது அந்த திவ்யதேசத்தில் வேத ப்ரபந்தபாராயண கோஷ்டிக்காரர்களிடையே ஸம்பாவிதமான சிற்சில வைஷம்யங்களைப் போக்கி ஸமாதான வார்த்தைகளை அநுக்ரஹிக்க, அவர்களும் அதைக்கேட்டு ஸமரஸபுத்தியுள்ளவர்களானார்கள். அதைக்கண்டு ஸ்ரீஅழகியசிங்கரும் '**अहो भाग्यमहो भाग्यमहीन्द्रपुरवासिनोः। दम्पत्योर्देशिकाख्यं यदपत्यमिति कथ्यते॥**' என்று ஸாதித்து அந்த திவ்யதேசப்பெருமையைப் புகழ்ந்தாயிற்று. பின் ஒரு ஸமயம் ஸ்ரீஅழகியசிங்கர் ஸ்ரீதேவநாதனையும் ஸ்ரீதேசிகனையும் தம் மடத்திற்கெழுந்தருளப்பண்ணி விசேஷோத்ஸவம் கண்டருளச்செய்து பெருமாளுக்கும் தேசிகனுக்கும் விசேஷ ஸம்பாவனையும் செய்தருளினார்.

பின்பு சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் முடிந்து உத்தானத்திற்கு ஸமீபத்திலிருக்கும் நத்தப்பட்டு என்கிற க்ராமத்திற்கு ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனுடன் எழுந்தருளியிருந்து மறுதினம் திரும்பி எழுந்தருளும்போது திருவஹீந்த்ரபுரவாஸிகளெல்லோரும் ஒன்றுகூடி எங்கும் நடந்திராத விசேஷ மர்யாதைகளை நடப்பிக்க ஸ்ரீஅழகியசிங்கரும் மடத்திற்கெழுந்தருளினார்.

அநந்தரம் புரட்டாசி மாதம் ஸ்ரீவேதாந்ததேசிகனுக்கு அவதாரோத்ஸவம் நடக்கும்போது ஒவ்வொரு ஸமயத்திலும் ஸ்ரீஅழகியசிங்கரை ஸன்னிதிக்கு எழுந்தருளும்படி செய்வித்து விசேஷ ஸேவைகளைப் பண்ணிவைத்தபின்தான் ஸ்ரீதேசிகன் வீதிகளில் எழுந்தருளுவது வழக்கம். இப்படியாக ஸ்ரீஅழகியசிங்கரும் ஒவ்வொரு திருக்கோலத்திலும் வாஹனஸேவையிலும் ஈடுபட்டு கண்ணாடியறை உத்ஸவம் முதலாக எல்லா உத்ஸவங்களைப் பற்றியும் உல்லேகாலங்காரத்துடன் கூடிய ச்லோகங்களை ஸாதித்துக்கொண்டு அநுபவித்தாயிற்று. அவ்வநுபவப்ரகாரங்களைக் காட்டும் ச்லோகங்களை ஒன்றாகச் சேர்த்து '**श्रीवेदान्तदेशिकोत्सवमालिका**' என்ற திருநாமத்துடன் ஒரு புத்தகமாகச் செய்யப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீதேசிகன் உத்ஸவம் முடிந்ததும் அப்போது அந்த திவ்யதேசத்திலிருக்கும் ஸ்ரீதேசிகன் திருமாளிகை ஜீர்ணமாகிவிட்டபடியால் ஸ்ரீஅழகியசிங்கர் அதை ஜீர்ணோத்தாரணம் பண்ணவேண்டுமென்று திருவுள்ளம் பற்ற அதை யநுஸரித்து அந்த திவ்யதேசத்திலிருக்கும் ஸ்வாமிகள் அடுத்த ஐப்பசி மாதத்தில் ஒரு நல்லநாள் பார்த்து சுபமுஹூர்த்தத்தில் ஸ்ரீஅழகியசிங்கரின் திருக்கையாலேயே ஆரம்பம் செய்விக்க வெள்ளியால்ஒருகொல்லரைச் செய்து அதை ஸ்ரீஅழகியசிங்கர் கையில் கொடுக்கும்போது அந்த ஸமயம் அங்கு ஸந்நிஹிதராயிருந்த ஸ்ரீதிருக்குடந்தை அழகியசிங்கரிடம் கொடுக்கும்படி ஸ்ரீஅழகியசிங்கர் நியமனமாக அவருமதை வாங்கி ஸ்ரீஅழகியசிங்கரின் நியமனத்தை சிரஸா வஹித்து அஸ்திவாரக்கல் நாட்டினர். அந்த கட்டிடமும் வெகு விரைவில் நிர்விக்நமாகக் கட்டி முடிந்தது. அந்த கைங்கர்யத்திற்கு ஸ்ரீஅழகியசிங்கர் தம் மடத்திலிருந்தும் ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கர் முதலான சிஷ்யர்கள் மூலமாயும் விசேஷமாக த்ரவ்யஸஹாயம் செய்துள்ளார். அந்த கட்டிடம் வெகு விசாலமான மண்டபமாய் அமைந்து ஸ்ரீதேவநாதனுடையவும் ஸ்ரீதேசிகனுடையவும் விசேஷோத்ஸவகாலங்களில் விச்ராந்திமண்டபமாக உபயோகப்பட்டு வருகிறது.

இப்படி ஐப்பசி முடிய நான்கு மாதகாலம் ஸ்ரீதேசிகனுடைய வைபவங்களை யநுபவித்துவிட்டு கார்த்திகை மாதத்திய ஸ்ரீஅத்திப்பட்டு அழகியசிங்கருடைய அவதாரமஹோத்ஸவத்தை திருக்குடந்தை ஸமீபத்திலிருக்கும் நரஸிம்ஹபுரத்தில் நடத்தவேண்டுமென்ற திருவுள்ளத்தால் ஒரு நல்ல நாள் பார்த்து ப்ரயாணம் புறப்படுவதாச அருணோதயத்தில் பரிஜனங்களுடன் ஸித்தமாயிருக்க, ஸ்ரீதேவநாதனும் ஸ்ரீதேசிகனும் ஸ்ரீஅழகியசிங்கரை விட்டுப் பிரிய மனமில்லாமல் திடீரென்று ஒரு மேகத்தை ஸங்கல்பிக்க, அதுவும் ப்ரளயகாலமேகம்போல் வர்ஷிக்க ப்ரயாணத்தை நிறுத்தவேண்டியதாயிற்று. பின் அடுத்த வாரத்தில் ப்ரயாண ஸந்நாஹம் செய்து புறப்படும்போது ஸ்ரீஅழகியசிங்கர் மடத்திலிருந்து வெளியில் எழுந்தருளுகையில் திருமுடியில் வாயிற்படி முட்டிற்று. ஸ்ரீஅழகியசிங்கர் அதையும் லக்ஷ்யம் செய்யாமல் ஸ்ரீஅத்திப்பட்டு அழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் ஸமீபத்திலிருந்தபடியால் அதை உத்தேசித்து இதரர்களின் ப்ரார்த்தனைக்கிணங்காமல் புறப்பட்டு பாதசாரியாகவே எழுந்தருளி வெகு ச்ரமப்பட்டு திருநக்ஷத்ரதொடக்க தினத்தன்று மத்யாஹ்னம் நரஸிம்ஹபுரமெழுந்தருளியாயிற்று. இந்த ப்ரயாணத்தில்தான் ஒருநாள் ஸ்வாமிகளெல்லோருமாக ஸ்ரீஅழகியசிங்கரின் திருமேனி ச்ரமத்தைப் பார்த்து பல்லக்கை எதிரில் கொண்டுவந்து நிறுத்தி அதில் எழுந்தருளவேண்டுமென்று ஏகோபித்து ப்ரார்த்திக்க ஸ்ரீஅழகியசிங்கர், இந்த ப்ரயாணம் முடிந்து நம்மாழ்வாரை ஸேவித்து மறுபடி அஹோபிலம் எழுந்தருளி அங்கிருந்து திரும்புகையில் பல்லக்கை உபயோகித்துக் கொள்வதாக ஸாதித்தாயிற்றென்று மஹான்கள் சொல்லக் கேட்டதுண்டு.

பின் நரஸிம்ஹபுரத்தில் குளத்தில் நீராடி ப்ருந்தாவனங்களை ஸேவித்துக்கொண்டு புறப்படும் ஸமயத்தில் யாரோ ஒருவர் இந்த ப்ருந்தாவனக் கட்டிடத்தில் இன்னமொரு ப்ருந்தாவனம் கட்ட இதோ இடமிருக்கிறது என்று விண்ணப்பித்ததைக் கேட்டு ஸ்ரீஅழகியசிங்கரும் அந்த ப்ருந்தாவனங்களில் எழுந்தருளியிருக்கின்ற சா (ஶா) பாநுக்ரஹஸ்வாமி

என்று ப்ரஸித்தரான ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் முதலிய மூன்று ஸ்வாமிகளின் மேன்மையையும் தம்முடைய நீர்மையையுமநுஸந்தித்து நமக்குக்கூட இப்பேறு கிடைக்குமோ வென்று திருக்கண்களை மூடிக்கொண்டு ஒரு நாழிகை த்யானத்திலெழுந்தருளியிருந்தாயிற்று. அந்த ஸமயம் மூன்று கருடாழ்வார்கள் ஆகாயத்தில் தமக்கு நேரே த்வனித்துக்கொண்டே வட்டமிடுவதைப் பார்த்து சில ஸ்வாமிகள் ஸ்ரீ அழகியசிங்கரிடம் விஜ்ஞாபிக்க, ஸ்ரீ அழகியசிங்கரும் கண்களைத் திறந்து பார்த்து ஆச்சர்யப்பட்டவராய் அங்குள்ளவர்களைப் பார்த்து புநராவ்ருத்தியில்லாத ஸ்ரீவைகுண்டலோகத்திலிருந்து நானொருவனன்றோ இப்போது திருப்பிவந்துவிட்டேன் என்று தாம் த்யானம் செய்கிற காலத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் அந்த மூன்று ப்ருந்தாவன ஸ்வாமிகளுடன் சேர்ந்திருந்ததாயும், மறுபடி இவர்கள் கூப்பிட்டபோது தாம் திரும்பிவந்ததாயும் பொருள்படும்படி அருளிச்செய்துவிட்டு மடத்திற் கெழுந்தருளி திருநக்ஷத்ரமஹோத்ஸவத்தை உபக்ரமித்து வேத ப்ரபந்த ஸ்ரீபாஷ்யாதி க்ரந்த பாராயணங்களுடன் நடத்தி பத்தாவது நாள் விசேஷஸம்ப்ரமத்துடன் சாற்றுமுறையும் செய்தருளியாயிற்று.

ஸ்ரீ அழகியசிங்கருக்கு இவ்வுத்ஸவத்திலுண்டான ச்ரமத்தாலும், இவ்வுத்ஸவத்திற்காக வெகுதூரதேசம் ப்ரயாணம் வேகமாகச்செய்த ச்ரமத்தாலும் திருமேனியில் அபாடவம் எற்பட்டு அசக்தியும் க்ரமேண அதிகமாய் வந்தது. அப்போது ஸ்ரீதிருக்குடந்தை அழகியசிங்கர் தமக்கு உபாயாநுஷ்டானத்தை ப்ரார்த்திக்க அவரிடம் **'सन्तानबीज कुरुपाण्डवानां'** என்கிற ச்லோகத்தைச் சொல்லி விசேஷகடாக்ஷம் செய்தருளி க்ருச்ராசரணபூர்வகமாக தூமசகடமார்க்கமில்லாமல் திருவணைக்குச் சென்று நீராடிவரும்படி நியமிக்க அவரும் அந்த நியமனத்தை முடிமேல் தாங்கி அவ்வாறே முக்யபக்ஷமாக க்ருச்ராசரணம் செய்து யாத்ரா தானமும் செய்து நியமனம் பெற்றுக்கொண்டு புறப்பட்டு மிகத்வரிதமாகவே வெகு தூரம் வரை சென்றாயிற்று. இப்படியிருக்க ஸ்ரீ அழகியசிங்கருக்குத் திருமேனியில் வரவர நோவு அதிகமாகி ஆஸன்ன தசையிலிருப்பதாகத் தெரிந்துகொண்டு திருவணையாத்திரைப் பூர்ணமாகாமலேயே தமக்கு உபாயாநுஷ்டானம் ஸ்ரீ அழகியசிங்கர்மூலம் கிடைக்கவேணுமென்கிற அவாவால் திரும்பி வரலாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கரும் இதைக்கேட்டு இவருக்கு இவ்வளவே போதுமானதென்று திருவுள்ளமாய் குளிரக் கடாக்ஷித்து உக்திநிஷ்டாரூபமான பரந்யாஸத்தை ஸாங்கமாக அநுஷ்டிப்பித்து ப்ரேஷமந்த்ரத்தையும் உபதேசித்தருளினார். அந்த ஸமயம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்வர்ணம்ஸ்வாமி முதலிய அநேகர் தங்களுக்கு உபாயாநுஷ்டானத்தை ப்ரார்த்திக்க அவர்களுக்கும் அவ்விதமே உபாயாநுஷ்டானத்தைச்செய்துவைத்து ப்ரேஷமந்த்ரத்தையும் உபதேசித்தாயிற்று.

இப்பவும் தமக்கு நினைவும் சக்தியுமிருக்கும் வரையில் ஆச்ரிதர்களுக்கு உஜ்ஜீவனோபாயத்தைச் செய்துகொண்டும், சக்தி குறைந்து சயனித்திருக்கும்போதும் ப்ரபத்தி ப்ரயோகவாக்யங்களையும் பாதுகாஸஹஸ்ரச்லோகங்களையு மநுஸந்தித்துக்கொண்டே மூன்று நாள் பர்யந்தம் எழுந்தருளியிருந்து விகாரி ஸூ மார்கழிமீ 3௳ சனிக்கிழமை பௌர்ணமி சந்த்ரக்ரஹணகாலத்தில் ரோஹிணீ நக்ஷத்ரத்தில் தன்னடிச்சோதிக்கெழுந்தருளியாயிற்று. அப்போது ஸ்ரீ அழகியசிங்கருக்கு இரண்டு மாதங்கள் குறைவாக ஐம்பத்தைந்து திருநக்ஷத்

ரம் தான். ஸந்யாஸாச்ரமத்தில் இரண்டு சாதுர்மாஸ்ய ஸங்கல்பங்களில் ஒன்று திருவெவ்வுளூரிலும் மற்றொன்று பெருமாள்கோயிலிலும் நடந்தன. ஆஸ்தானத்தை ஏற்றுக் கொண்டபின் ஒரே ஒரு சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்தான் திருவஹீந்த்ரபுரத்தில் நடந்தது. நரஸிம்ஹபுரத்தில் 25-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன், 26-வதுபட்டம் ஸ்ரீரங்கநாதயதீந்த்ரமஹாதேசிகன், 30-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸவேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன் இவர்களுடைய ஸன்னிதியில் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ப்ருந்தாவனம் அமைந்ததை யாவரும் கண்டு வியந்தார்கள். இவ்வாறு ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹன் நம் ஸ்ரீ அழகியசிங்கருக்கு மோக்ஷஸாம்ராஜ்யபட்டாபிஷேகத்தைச் செய்தருளி உகந்தாயிற்று.

இம்மஹானுடைய சரமச்லோகம்:—

अब्दे नाम्ना विकारिण्यधिवसति धनूराशिमह्नामधीशे
राकायां भानुसूनोरहनि हिमकराध्यक्षनक्षत्रयुक्ते ।
तत्तादृग्दान्तिशान्त्याद्यखिलगुणनिधिर्ज्ञानविज्ञानसिन्धुः
प्रागाच्छ्रीवीररघ्वीट् शठरिपुयतिराट् श्रीनृसिंहांघ्रियुग्मम् ॥

विकार्यब्दे चापमासि राकायां मन्दवासरे ।
वीररघ्वीशशठजिद्योगीन्द्रोऽगात्परं पदम् ॥

இவ்வழகியசிங்கரின் தனியன்கள்:—

एषस्यादित्यहेतोश्शठरिपुशठजिल्लक्ष्मणाभ्यां मुनिभ्यां
श्रीमद्भ्यां प्रेक्ष्य शिष्टं श्रुतिशिखरयुगे श्रीरहस्यत्रयार्थे ।
विख्यातं शब्दतन्त्रे कणचरणकथादिष्वभिज्ञं शमादि-
क्षीराब्धिं कौशिकश्रीरघुवरतनयं नौमि गोपालसूरिम् ॥

இது பூர்வாச்ரமத் தனியன். இதன் கருத்து:- இவர் ஸ்வரூபலாபம் பெறவேண்டுமென்று பரமக்ருபையால் 33-வது பட்டம் ஸ்ரீசடகோபயதீந்த்ரமஹாதேசிகனும் 34-வது பட்டம் ஸ்ரீசடகோபராமாநுஜயதீந்த்ரமஹாதேசிகனும் வேதாந்தக்ரந்தங்களிலும் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்களிலும் நன்கு சிக்ஷிக்கப்பட்டும், வ்யாகரணசாஸ்த்ரத்தில் மிக ப்ரஸித்தராயும், ந்யாயசாஸ்த்ரம் முதலியவற்றிலும் நல்ல தேற்சியுடையவரும், சமதமாதி கல்யாணகுணங்களுக்கு நிதியாயும், பிள்ளைபாக்கத்தில் கௌசிக கோத்ரத்தில் கோமாண்டூர் இளையவில்லி வம்சத்தில் அவதரித்த ஸ்ரீவீரராகவாசார்ய ஸ்வாமியின் குமாரருமான ஸ்ரீகோபாலாசார்யரென்ற மஹானை வணங்குகிறேன் என்று.

(தொடரும்)

ஸ்ரீ:

சொல்லொன்று! செயலொன்று!

குற்றமா? குணமா?

அகிலபுவனங்களையும் படைத்தல், காத்தல், அழித்தல் என்கிற வ்யாபாரங்களை விளையாட்டாகக்கொண்ட ஸ்ரீமந்நாராயணன், அவ்வோ அவஸரங்களில் மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரம்ருக, வாமனாத்யவதாரங்களை எடுத்து துஷ்க்ருத்விநாசம் பண்ணி ஸாதுக்களை ரக்ஷித்துவந்தான். ஆகிலும் தாமே தம்முடைய அவதார ப்ரயோஜனத்தை கீதையில் சொல்லும்போது 'ஸாதுரக்ஷணம்தான் தமக்கு முக்யம். துஷ்க்ருத்விநாசம் செய்வதற்கு அங்குவிட்டு இங்குப் பிறக்கவேண்டியதில்லை. அதை ஸங்கல்ப மாத்திரத்தால் அங்கிருந்தே செய்ய வல்லன்' என்னும் பொருள்தோன்ற **'परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां'** என்றார். இங்கு **विनाशायच** என்றதால் துஷ்டர்களை நாசம்செய்வது முக்ய ப்ரயோஜனமில்லை. அது அர்த்தாத் செய்யப்படுமது என்று தேறுகிறது.

அஜாயமானன் இவ்விருள்தருமா ஞாலத்திலனேக பிறவிகள்கொண்டு சிஷ்டர்களை ரக்ஷிப்பது இருவகைப்படும். அதில் **'त्रुटियुगायते त्वामपश्यतां। कुटिलकुन्तलं श्रीमुखं च ते'** என்று ஒரு க்ஷணம் பகவத்ஸேவையை இழந்தாலும் அதை ஒரு யுகமாக எண்ணி ஏங்கி உள்ளம் உருகி நிற்குமவர்களுக்கு நேரில் ஸேவை தந்து ரக்ஷிப்பது ஒருவிதம். **'एहि पश्य शरीराणि'** என்று காண்பித்த காது, மூக்குகளறுந்து அடிபட்டு கிடக்கும் மஹர்ஷிகளுக்கு ஹிம்ஸை செய்த பாகவத விரோதிகளை வதம் செய்து ரக்ஷிப்பது மற்றொருவிதம். இதில் மீளாதாமையாய்ப் பிறந்த பலபிறப்பிலும் பாகவத விரோதிகளை நிரஸித்து செய்த ஸாதுரக்ஷணத்தையே பெரும்பாலும் நாம் காண்கிறோம். ராமக்ருஷ்ணவதாரங்களில் இரண்டுவிதமான ரக்ஷணத்தையும் தர்மஸம்ஸ்தாபனத்தையும் பூர்ணமாக அநுஷ்டித்துக்காட்டியதைப் பரக்கக் காணலாம். அதிலும் ஸ்ரீராமாவதாரத்தில் ஸௌலப்யத்தைவிட பரத்வமே அதிகமாகத் தோன்றும்படி நடித்துக் காட்டினான். க்ருஷ்ணாவதாரத்தில் பரத்வத்தைக்காட்டிலும் ஸௌலப்யம் விஞ்சியிருந்தது. பரத்வமும் ஸௌலப்யமும் சேர்ந்திருப்பதல்லவோ பரதத்வஹேது.

ஸ்ரீகண்ணன், கோ, கோப, கோபீஜன மத்யத்தில் வஸித்து வந்ததாலேயே அவனுடைய ஸௌலப்யத்தின் ஏற்றம் நன்கு விளங்கும். பத்துடையடியவர்களுக்கெளியவனாயும், பிறர்களுக்கரியவனுமானவன் வெண்ணெய் யுண்டானிவனென்று உரலோடு ஒன்றுபட்டு கயிறால் கட்டுண்டு ஏங்கிநின்ற ஸௌலப்யாதிஶயத்தைப் பேசி மூர்ச்சித்தார் நம்மாழ்வார். ஒரு தினமா! இரண்டு தினமா! ஆறுமாத காலம். இவ்விதம் ஆழ்ந்த பக்தியுடையவர்களான ஆழ்வார்கள் கண்ணனின் ஸௌலப்யத்தில் ஈடுபட்டு பரவசரானார்கள் என்பது அவர்கள் அருளிய பாக்களிலிருந்தும், அவர்களின் சரித்ரத்தினின்றும் நாம் அறிகின்றோம்.

மாலாகாரன் வீட்டிற்குச் சென்று அவன் கொடுத்த மாலைகளை அணிந்தான். க்ஷீராப்தியை விட்டு, தேவதைகள் கால் வைக்கக் கூசும் இக்கர்மபூமியில் கால்வைத்துவந்ததுமன்னியில் நான் வஸிக்கும் நகரத்திற்கும் வந்தார்கள்; அதிலும் நெடுந்தெருவைப் பார்த்துச் செல்லாமல் முடுக்குத்தெருவில் ப்ரவேசித்தார்கள். அங்குள்ள மணிமாடங்கள் சூழ்ந்த மாடமாளிகைகளின் உட்புகாமல் சிறிய குடிசையாயுள்ள என் வீட்டிற்கு வந்தார்கள்; என்ன ஸௌலப்யம் என்று தோன்ற **'मम गेहमुपागतौ'** என்று மாலாகரன் பேசுகிறான்.

கீதையில் தாம் சொல்லுமிடத்தில், பத்ரமோ, புஷ்பமோ, பழமோ, ஜலமோ ஏதாகிலும் தங்கள் சக்திக்கநுகுணமாக பக்தியோடு எனக்கு எவர்கள் கொடுத்தாலும் அதை நான்

புஜிக்கிறேனென்றான். அதன்படி ஹஸ்தினாபுரத்தில் பீஷ்மத்ரோணாதிகளும், துர்யோதனனுமிருக்கச்செய்தேயும் சதுர்த்தவர்ணத்தவரான விதுரர் வீட்டில் புஜித்தார். **'विदुरान्नानि बुभुजे शुचीनि गुणवन्ति च'** என்பதால் பாவபந்தம் பார்க்குமத்தனை யொழிய மற்று நாமிடும் பச்சையில் வரிசை – கௌரவம் – தாரதம்யம் பாரானென்றல்லவோ ஏற்படுகிறது. இவ்விதம் ஆங்காங்கு சென்று அவ்வோ பாகவதர்களுக்கு ஸேவை ஸாதித்து அவர்கள் செய்யும் பூஜையை ஏற்று வந்தானென்பதால் அவதார முக்யப்ரயோஜனத்தை நன்றாக அநுஷ்டித்துக் காட்டினானென்பது நன்கு விளங்குகிறது. பின்னும் ஸ்ரீராமாவதாரத்தில் பரத்வம் தலை தூக்கி நின்றதால் தூது போவது, ஸாரத்யம் செய்வது முதலியவைகள் செய்ய முடியாமல் போயிற்று. ஆகையாலேயே 'சொல்லொன்றும் செயலொன்றும் செய்யமாட்டிற்றிலன். **'अप्यहं जीवितं जह्यां त्वां वा सीते सलक्ष्मणां। न हि प्रतिज्ञां संश्रुत्य'** என்றான். ஆதலால் **'रामो द्विर्नाभिभाषते'** ராமன் ஸத்யம் தவறாதவன் என்கிற பெயரையும் பெற்றான். இவைகள் மேன்மைக்குகந்தவைகள்.

ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் அதிசயிதஸௌலப்யத்தால் இவைகள் மாறுபட்டு காணப்படுகின்றன. ஐவர்களுக்காக துர்யோதனாதிகளிடம் தூது சென்றான். தேர்ப்பாகனானான். அர்ஜுனன் மேல்தட்டிலும் கண்ணன் கீழ்த்தட்டிலும் உட்கார்ந்தான். பார்த்தஸாரதி என்கிற பிருதையும் பெற்றான். **'सेनयोरुभयोर्मध्ये रथं स्थापय'** என்று அர்ஜுனன் சொல்ல அதன்படி இரண்டு ஸேனைகளின் நடுவில் தேரை நிறுத்தி ஸநக ஸநந்தநாதிமஹாயோகிகளுக்கும் கூட கிட்ட நிலமல்லாத தன்னை **'सकलमनुजनयनविषयताङ्गतः'** என்னும்படி ஸகலருக்கும் ஸேவை தந்தான். இவைகள் யாவும் ஸௌலப்யத்தின் பராகாஷ்டையைத் தெரிவிக்கின்றவனல்லவா!

சொன்ன சொல்லும் **தவறினான்**. அதாவது:— ஸ்ரீவாஸுதேவனைப் பாரத யுத்தத்திற்கு முன் பாண்டவர்களும் துர்யோதனாதிகளும் தங்கள் தங்கள் பக்ஷத்திலிருந்து யுத்தத்தை நடத்தித் தரவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். அப்பொழுது தம்முடைய ஸேனையைத் துர்யோதனாதிகளுக்குத் தந்து தாம் மட்டும் பாண்டவர்கள் பக்ஷம் சேர்ந்தான். இதையறிந்த ஸ்ரீபீஷ்மாசார்யர் சொல்லுகிறார்– ஸ்ரீகண்ணன் ஒருவனே யாகிலும் அவன் ஆயுதமெடுத்து யுத்தம் செய்தால் பதினாயிரம் அக்ஷௌஹிணி ஸைந்யங்களை அழிக்கவல்லன். ஆகையால் அவன் ஒருவனேயாகிலும் அவனே நம்முடைய ஸஹாயத்திற்கு வேண்டுமென்று. இதைக்கேட்ட ஸ்ரீகண்ணன் 'நாம் யார்பக்கம் இருந்தாலும் ஆயுதமெடுப்பதில்லை' என்று ப்ரதிஜ்ஞை செய்தான். உடனே ஸ்ரீபீஷ்மரும் 'உம்மை ஆயுதமெடுக்கும்படி நாம் செய்கிறோம்' என்று சொல்லிச்சென்றார்.

பிறகு பாரதப்போர் மூண்டது. அப்பொழுது கௌரவஸேனைக்கு ஸ்ரீபீஷ்மர் ஸேநாதிபதியானார், அர்ஜுனனுடன் அத்யுக்ரமான சமர் புரிந்தார். பார்த்தன்பேரில் பாணவர்ஷங்களை வர்ஷித்தார். அடிபட்ட அர்ஜுனனின் நிலை ஆட்டங்கொண்டது. கண்ணனின் கவசங்களை ஸ்ரீபீஷ்மரின் பாணங்கள் களைய ஆரம்பித்தன. இவைகளைப்பார்த்தார் பார்த்தஸாரதி. தேர்த்தட்டிலிருந்து குதித்தெழுந்தார். சக்ராயுதத்தைக் கையிலேந்தி பீஷ்மரைக் கொல்வதற்கு வேகமாகச் சென்றார். உடனே பீஷ்மரும் இவருடைய கோபத்தைத் தணிப்பதற்கு **'प्रत्यस्त्रमंजलिरसौ तव निग्रहास्त्र'** என்கிறபடி கைகூப்பி தலைவணங்கிநின்று **'एह्येहि'** (எழுந்தருளணும் எழுந்தருளணும்) என்றார். மேலும் சொல்லுகிறார்–'ப்ரபோ க்ருஷ்ணா! தேவரீர் சொல்லொன்றும் செயலொன்றுமாகச் செய்து என்னுடைய ப்ரதிஜ்ஞையை ஸத்யமாக்கினீர். மிக்க ஸந்தோஷம்' என்று.

இதுவிஷயத்தில் பகவான் பொய் சொன்னான் என்பதில்லை. **'अस्तङ्गते भीष्मे ज्ञानाप्यल्पी भविष्यन्ति'** (ஸ்ரீபீஷ்மர் பரமபதித்துவிட்டால் லோகமே அல்பஜ்ஞாநமுள்ளதாகிவிடும்) என்று சொல்லும்படி அதிக அறிவுடையவராயும் நைஷ்டிகப்ராஹ்மசர்யவ்ரதத்தை

ஏற்றதால் காங்கேயன் என்கிற பெயர் மறைந்து பீஷ்மர் என்ற பெயரைப் பெற்ற குரு வ்ருத்தர், ஸமீபத்திலடிபட்டு விழப்போகின்றார். அவர் நம்முடைய பக்தர். அவருடைய ப்ரதிஜ்ஞை நிறைவேறவேண்டாமா? நமக்குப் பக்த பராதீனனென்று நாமமில்லையா? இதை உலகத்தவருக்கு நாம் காண்பிப்பதற்கு இதுவே தக்க தருணம் என்று எண்ணி பக்தனுக்குத் தோற்று 'ஆயுதமெடேனென்று சொன்னாலும் ஆயுதமெடுக்கலானான்'. இது ஸ்ரீக்ருஷ்ணனுக்கு குணமே தவிர குற்றமில்லை. என்ன பாகவத பாரதந்த்ர்ய காஷ்டை!

ஸ்ரீபீஷ்மர் தம்முடைய சரமதசையில் சரக்கூடத்தில் முமுக்ஷுவாய் இருக்கும்போது ஸ்ரீக்ருஷ்ணனைக்குறித்து **'त्रिभुवनकमल'** என்று தொடங்கும் பத்து ச்லோகங்களால் ஸ்தோத்ரம் செய்கின்றார். அப்பொழுது இந்த வ்ருத்தாந்தங்களையும் நினைத்து கண்ணனை ஸ்தோத்ரம் செய்கிறார். அந்த ச்லோகம் பின்வருமாறு:—

'स्वनिगममपहाय मत्प्रतिज्ञामृतमधिकर्तुमवप्लुतो रथस्थः । धृतरथचरणोऽभ्ययाच्चलद्गुर्हरिरिव हन्तुमिभं गतोत्तरीयः ॥

शितविशिखहतो विशीर्णदंशः क्षतजपरिप्लुत आततायिनो मे । प्रसभमभिससार मद्वधार्थं स भवतु मे भगवान् गतिर्मुकुन्दः ॥'

இதன் கருத்து. என்னுடைய பாணங்களால் அடிபட்டு கவசம் முறிந்து ரத்தத்தினால் உடம்பு முழுதும் நிறைந்தவனாகி 'ஆயுதமெடேன்' என்கிற தம்முடைய ப்ரதிஜ்ஞையைத் துறந்து 'ஆயுதமெடுக்கச்செய்கிறேன்' என்கிற என் ப்ரதிஜ்ஞையை ஸத்யம் செய்வதற்காக ரதத்திலிருந்தும் குதித்து, மேல் உத்தரீயம் கீழேவிழுந்ததுகூட தெரியாமல் சக்ராயுதத்தை ஏந்திக்கொண்டு யானையைக் கொல்லக் கிளம்பிய சிங்கத்தைப்போல் பலாத்காரமாக என்னைக் கொல்லும்பொருட்டு எவன் என்னை எதிர்த்துவந்தானோ அந்த முகுந்தன் ஸ்ரீகண்ணன் தான் எனக்கு கதி என்று.

செய்திகளின் தொடர்ச்சி —

ஷஷ்ட்யப்தபூர்த்தி

மன்மத ௵ ஆவணி ௴ 5௳ ஞாயிற்றுக் கிழமை ஹஸ்தநக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் ஸ்ரீஅஹோபிலமடம் ஆஸ்தானவித்வான் ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமிக்கு ஷஷ்ட்யப்தபூர்த்திமஹோத்ஸவம் நெடுந்தெரு அக்ரஹாரத்தில் ஸ்ரீஅழகியசிங்கர் நியமனத்தாலும் அநுக்ரஹத்தாலும் மிகவும் நன்றாக நடைபெற்றது. 2 தினங்களுக்கு முன் வேத பாராயணமும், க்ரந்தபாராயணங்களும் நடைபெற்றன. ஷஷ்ட்யப்தபூர்த்தியன்று ஸ்ரீஅக்நிஹோத்ரம் தாதாசார்யஸ்வாமி, சைலி பட்டாசார்யஸ்வாமி, தேவனார்விளாகம் வீரராகவாசார்யஸ்வாமி, ஆசுகவி, வில்லூர் ஸ்ரீநிவாஸராகவாசார்யஸ்வாமி, ஸ்ரீநிவாஸதேசிகாசார்யஸ்வாமி முதலிய தென்தேசத்திலுள்ள எல்லா பண்டிதர்களும் வந்திருந்தார்கள். 41-வது பட்டம் ஸ்ரீஅழகியசிங்கர் குமாரர், ஸ்ரீகார்யம் ஸ்வாமி முதலிய ஸ்ரீஸன்னிதியைச் சேர்ந்த வித்வான்களும், மற்றும் கைங்கர்யபரர்களும் வந்திருந்து இந்த வைபவத்தை நன்றாக நடத்திவைத்தார்கள். வெளியூர்களிலிருந்து அனேக பந்துக்களும், லௌகிக ப்ரமுகர்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீஅழகியசிங்கர் நூதனமாக ஒரு சால்வை அநுக்ரஹித்தாயிற்று. சென்னை, பம்பாய், ஹைதராபாக்கம், மதுரை முதலிய விடங்களிலிருந்து அனேக ப்ரமுகர்கள் ஸம்பாவனையும் வாழ்த்துப்பாக்களும் மங்களச்லோகங்களும் பண்ணி அனுப்பியிருந்தார்கள். அங்கு வந்திருந்தவர்களுக்கும் ஸ்ரீஸன்னிதியைச்சேர்ந்தவர்களுக்கும் உள்ளூர்ஸ்வாமிகளுக்கும் பஞ்சபக்ஷ்யத்துடன் ஷட்ரஸோபேதமான ததீயாராதனம் பண்ணிவைத்து, யதோசிதஸம்பாவனையும் பண்ணினார். அந்த மஹான் பல்லாண்டுகள் அரோகத்ருடகாத்ரராயெழுந்தருளியிருந்து ஸதுபதேசத்தைப் பண்ணி வரவேணுமாய் ஶரண்யன் அநுக்ரஹிக்க ப்ரார்த்திக்கிறேன்.

புரிசை நடாதூர் க்ருஷ்ணதாஸன்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபா, புதுடில்லி.

தலைநகரில் சிறப்பாகப் பணி யாற்றிவரும் ஸ்தாபனங்களில் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த

(தொடர்ச்சி 262-வது பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸ்ரீஸன்னிதி செலவினங்கள், ததீயாராதனைவிஷயமாயும் சிப்பந்திகள் சம்பளம், நடைமுறை ரிபேர் விஷயங்களும் ஸ்ரீகார்யம் ஹஸ்தாந்தரம் மூலமாயும், மற்றபடி வெளியூர் ரிப்பேர்கள், ஸந்மானங்கள், ச்ரமதக்ஷிணைகள் ஸ்ரீ ஸன்னிதியில் ஸ்ரீகார்யம் மூலமாயும், கார்யஸ்தர்கள் செலவுகளும், கோர்ட் வ்யவஹார செலவுகளும் ஜெனரல் மானேஜர் மூலமாயும் நடைபெற்றுவருகிறது. அதில் முதலிரண்டு செலவுகள் தினந்தோறும் நடப்பவைகள். பானகாராதனம் நடந்ததும் பெருமாள் முன்னிலையில் ஸ்ரீ அழகியசிங்கர் திருவோலக்கத்தில் ஸ்ரீகார்யம் ஸ்வாமி பெருமாள் தளியன், ஸேனைமுதலியார் தனியன், ஸ்ரீ அழகியசிங்கர் தனியன் இவைகளை ஸேவித்துவிட்டு அச்செலவினங்களையும் அமுந்திரி செலவையும் வாசித்து இருப்பை விண்ணப்பிப்பார். பிறகுதான் அந்த கணக்குகள் பதியப்போகும்.

சென்ற வருஷம் ஸங்கல்ப காலத்தில் ஜய, புரட்டாசி ஸஞ்சிகையில் முன்பு நடந்த ஸஞ்சாரத்தின் மைல்களும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடியை யாச்ரயித்தவர்களின் ஸங்க்யையும் வெளிவந்திருக்கின்றன. அதன்பிறகு துவரிமான் ஆரம்பித்து நெடுந்தெருவில் ஸங்கல்பத்திற்கெழுந்தருளுகிற பர்யந்தம் ஸுமார் 1100 மைல்கள் ஸஞ்சாரம் நடந்திருக்கிறது. 2400 பேர்களுக்கு மேல் ஸ்ரீ அழகியசிங்கரை யாச்ரயித்து ஸமாச்ரயண பரந்யாஸங்களைச் செய்துகொண்டார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் ஸஞ்சாரம் தனுர்மாதம் முதல்தேதி ஆரம்பித்தது. இந்த ஜில்லாவில் அக்ரஹாரங்கள் பரஸ்பரம் ஸந்நிஹிதங்களாயிருப்பதனால் ஸஞ்சாரத்தில் எழுந்தருளிய மைல்கள் அதிகமில்லாவிட்டாலும் எழுந்தருளியிருந்த அக்ரஹாரங்கள் அதிகம். ஸுமார் 9 மாதமாக ௸ ஜில்லாவிலேயே பெருமாள் ஸஞ்சாரம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கிறார். 10 மாதம் பூர்த்தியான பிறகுதான் அடுத்த ஜில்லாவுக்கெழுந்தருளுவார்போலிருக்கிறது. உத்தானத்திலிருந்து உத்தானம் வரை ஒரு வருஷமாகக் கணக்கிட்டால் இந்த வருஷத்தில் ௸ ஸஞ்சாரமும் சிஷ்யோஜ்ஜீவனமும் நடந்து வந்திருக்கிறது தவிர கைங்கர்யங்களில் திருக்கோட்டியூர், வில்லூர் புள்ளம்பூதங்குடி, கதாதரபுரம், ஆதனூர்களிலும், மைஸூர் ப்ராந்த்யத்தில் முக்கூடல் நரஸிம்ஹபுரத்திலும் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிக விக்ரஹ ப்ரதிஷ்டையும் நடந்திருக்கிறது. திருக்குடந்தை மடத்தில் ஆரம்பித்த ரிபேர் வேலையும், ஸ்ரீவில்லிபுத்தூர் மடத்தில் ஆரம்பித்த வேலையும் பூர்த்தியடைந்தது. முறையே ௸ மடங்களில் 6000, 2500 ரூபாய்கள் ஜீர்ணோத்தாரணார்த்தமாக செலவு செய்யப்பட்டது. திருப்புல்லாணியிலும் ஸுமார் 1000 ரூபாய்செலவில் மடம் ரிபேர்செய்யப்பட்டது. ஆதனூரில் ஸ்ரீரங்கநாதன் ஸன்னிதியிலும் சில ரிபேர்கள் செய்யப்பட்டன. அங்கு ஸ்ரீ ஸந்நிதிக்கு ஸ்ரீ அழகியசிங்கரெழுந்தருளியிருக்கும்படியானதொரு ஸந்நிவேசமும் ஏற்பட்டிருக்கிறது. ௸ கண்டவைகளில் ரூபாய் 1200 பிடித்தது. நரசிம்ஹபுரத்தில் பழையகோயில் புதுப்பிக்கப்பட்டு அந்த வேலையும், ப்ருந்தாவனம் ஸமீபமுள்ள கட்டிடவேலையும் நடந்து வருகின்றன. அங்கு ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹனின் ப்ரதிஷ்டைக்கான ஏற்பாடும் நடந்துவருகிறது. மைஸூர் ப்ராந்த்யம் முக்கூடல் நரஸிம்ஹபுரத்தில் மடத்தில் காம்பவுண்டு சுவர் முதலியவைகள் கட்டி 2500 ரூபாய் செலவில் பழுது பார்க்கப்பட்டது. திருக்கண்ணமங்கையில் மேலவீதியில் ரொம்பநாளைக்கு முந்தியே தரையோடு தரையாய் விட்டிருந்த இடத்தில் புதிதாக மறுபடி மடத்திற்கு நிர்மாணவேலை நடந்து வருகிறது. திருக்கோட்டியூர் தேசிகன் ஸன்னிதியில் ப்ராகாரங்கள் முதலியன

பழுதாகியிருந்து ரிப்பேர்வேலை நடந்துவருகிறது. தேசிகனுத்ஸவத்திற்குள் ஷெரிப்பேர் வேலை பூர்த்தியாகலாம். திருவஹீந்த்ரபுர மடத்திலும் ரிப்பேர் வேலை துவங்கியிருக்கிறது. தேரெழுந்தூரிலும் மடத்தில் 1000த்துக்குமேல் ரிப்பேரும் தியாகராஜபுரம் ப்ருந்தாவனத்தில் அவச்யம் செய்யவேண்டிய ரிப்பேர் ஸுமார் 400 ரூபாய்க்கும் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீரங்கத்தில் தசாவதாரன் ஸன்னிதியில் ஸ்ரீமதழகியசிங்கர்கள் எழுந்தருளியிருந்த ஆச்ரமங்கள் கல் சுவரெழுப்பப்பட்டு 2000 ரூபாய் செலவழித்து புனர்நிர்மித்து அதிலேயே நடந்த ஐப்பசியில் ஸ்ரீமதழகியசிங்கரின் வருஷாராதன கைங்கர்யமும் நடத்தப்பட்டது. நெடுந்தெருவில் ஸ்ரீஸன்னிதிக்காக கோயில்பக்கத்திலேற்பட்ட கட்டிடத்திலும் ஸுமார் 400 ரூபாய்க்கு ரிப்பேர்வேலை நடந்தது. மேலும் சில திவ்யதேசங்களில் அடியோடு இடிந்துபோன மடங்களையும், சில திவ்யதேசங்களில் புதிதாக சில மடங்களையும் கட்டவேணுமாய்த் திருவுள்ளமாகியிருக்கிறது. வடுவூர் மடத்திலும் 2000 ரூபாய்களில் ரிப்பேர் நடந்திருக்கிறது. அவ்வூரார் தங்களூர் மடத்து கைங்கர்யத்தில் தங்களுக்குமந்வயம் இருக்கவேணுமென்று ஒரு பாகம் ஸமர்ப்பித்தார்கள். மன்னார்குடியில் மடத்திலும் ஸ்ரீ பராங்குசயதீந்த்ரமஹாதேசிகன் ப்ருந்தாவனத்திலும் (39-வது பட்டம்) ரிப்பேர்கள் ஸுமார் 700 ரூபாய்க்கு நடந்து விளக்கும் போடப்பட்டுவருகிறது. திருவள்ளூரிலும் துவரிமான் ப்ருந்தாவனத்திலும் நடந்துவந்த ரிப்பேர்கள் பூர்த்தியடைந்தன. ஸ்ரீ அஹோபிலத்திலும் மலையிலும் கீழிலுமாக காரஞ்சன் முதலிய ஸன்னிதிகளிலும் 4000 ரூபாய் வரை கட்டிடவேலை நடந்து மேலும் நடைபெற்று வருகின்றது. ஆக நடந்த வருஷத்தில் ஸுமார் 25000 ரூபாய்வரை ஜீர்ணோத்தாரண கைங்கர்யம் நடந்திருக்கிறது. இது நிற்க ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திருவாபரணங்களும் புதிப்பிக்கப்பட்டு டோலைக்காகக் கிளைக்குத்துவிளக்கு முதலிய கைங்கர்யங்களிலும் 1000த்துக்குச் செலவு செய்யப்பட்டது.

கீதாபாஷ்யம் 10-வது அத்யாயமும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் ஸாத்யோபாயசோதனாதிகாரமும் காலக்ஷேபம் நடந்துவருகிறது.

பெருமாள் ஸஞ்சாரமாக எழுந்தருளின பிறகு முதல் வருஷத்தில் திருக்கள்ளத்தில் ஸ்ரீராமநவமியும், சென்னையில் (மாம்பலத்தில்) ஸ்ரீந்ருஸிம்ஹஜயந்தியும், அஹோபிலத்தில் ஸ்ரீக்ருஷ்ணஜயந்தியும் நடைபெற்றன. இரண்டாவது வருஷத்தில் மலையாளத்தைச் சேர்ந்த கிளியநூரில் ஸ்ரீராமநவமியும், கீழ்நத்தத்தில் ஸ்ரீந்ருஸிம்ஹஜயந்தியும், துவரிமானில் ஸ்ரீக்ருஷ்ணஜயந்தியும் நடைபெற்றன. மூன்றாவதுவருஷத்தில் பட்டுக்கோட்டையில் ஸ்ரீராமநவமியும், ஆதனூரில் ஸ்ரீந்ருஸிம்ஹஜயந்தியும். நெடுந்தெருவில் 9–9–55ல் ஸ்ரீக்ருஷ்ணஜயந்தியும் நடைபெற்றன. ஸ்ரீராமநவமியும் ஸ்ரீந்ருஸிம்ஹஜயந்தியும் ஸஞ்சாரத்தில் எவ்விடத்தில் நடக்குமென்று சொல்லமுடியாது. ஸ்ரீக்ருஷ்ணஜயந்திமட்டும் ஸங்கல்பமத்தியில் வருவதால் ஸங்கல்பம் நடக்குமிடத்தில் நடக்கும்.

9-9-55 ஸ்ரீக்ருஷ்ணஜயந்தி காலை பெரிய திருமஞ்சனம் நடந்தது. இரவு ஸ்ரீபாகவதம் வாசிக்கப்பட்டது. அப்பொழுது ஸ்ரீ அழகியசிங்கர் எல்லோர் மனத்திலும் நன்றாகப்படும்படி ஸ்ரீபாகவதத்திற்கு அர்த்தம் ஸாதித்தாயிற்று. டோலோத்ஸவத்தில் ஸங்கீத வித்வான் சடகோபாசாரியர் மிகவுமழகாகப் பாடினார். பிறகு வழக்கம்போல் இரவு ஒரு மணிக்குத் திருவாராதனமாகி மங்களஹாரத்தியானதும் ததீயாராதனம் விசேஷமாக நடைபெற்றது.

ஸ்ரீ அழகியசிங்கர் தாம் கைங்கர்யம் செய்வதைப் பற்றி விவரித்து ஸாதிக்கும்போது கீழ்க்கண்டவாறு ஸாதிக்கும்படி இருக்கும். அதாவது:— .ச்ருத்யாதிகளில் ஒருவிதமாக ரூபணம் பண்ணியிருந்தாலும் தமதநுஸந்தானத்தில் தம்முடைய சரீரத்தைப் பெருமாளுடைய ரதமாகவும், (காராகவும்) தாம் ஓட்டுகிறவர் (ஸாரதி) என்றும், காலை 4–30 மணிக்கெழுந்திருந்து வண்டியை சுத்தம் செய்து

பெருமாள் முன்னிலையில் நிறுத்துவதாயும், எப்படி எப்படி வண்டியை ஓட்டும்படி பகவந் நியமனமோ அவ்விதம் ஓட்டுவதாயும், மத்யாஹ்னம் ஸுமார் ஒரு மணிக்கு காருக்கு வேண்டியதுகளைப் போட்டு சுத்தம் செய்து ஓட்டுகிறவன் சற்று இளைப்பாறுவதுபோல் இரண்டு மணிகாலம் இளைப்பாறி மறுபடி அவரிடம் கொண்டு நிறுத்திவிடுவதாயும், ராத்ரி 10மணி ஸுமாருக்கு வண்டிக்கு ஓய்வு கொடுப்பதாகவும் பாவித்து கைங்கர்யம் நடத்துவதாக ஸாதிக்கும்படி. இதன் ஒற்றுமையை நேரில் ஸேவிப்பவர்கள் அநுபவிக்கலாம்.

(தொடரும்)

(259-வது பக்கத்தொடர்ச்சி)

ஸபாவும் ஒன்றாகும். ஸித்தாந்தங்கள்பற்றிய உபந்யாஸங்களையும் காலக்ஷேபங்களையும் பெரியவித்வான்களைக்கொண்டு ஏற்பாடுசெய்து வரும் இந்த ஸ்தாபனத்தின் 12-வது வார்ஷிக மஹோத்ஸவம் 24-7-55ல் விமரிசையாக நடத்தப்பட்டது. அடுத்த வருஷத்திற்கு ஸ்ரீடாக்டர் K. S. கிருஷ்ணனை மீண்டும் தலைவராகவும், ஸ்ரீசர்னல் ஸ்ரீநிவாஸன் & P. S. V. ஐயங்கார் இவர்களை உபதலைவர்களாகவும், ஸ்ரீவேணுகோபாலன் & V. S. R. சக்ரவர்த்தி இவர்களை கார்யதர்சிகளாகவும், போமநல்லூர் வங்கீபுரம் ரங்கஸாமி ஐயங்கார், S. M. கிருஷ்ணமாசாரியர் இவர்களை கமிட்டி மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த ஸ்தாபனம் மேன்மேலும் நல்வழியில் உழைக்கும்.

P. V. ரங்கஸாமி.

ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வார்ஷிகோத்ஸவம்.

ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் வழக்கப்படி ஸ்ரீரங்கம் ஸ்ரீமதஹோபிலமடத்தில் 14-9-55 முதல் 23-9-55 வரை பத்து தினங்கள் நடைபெறுமென்றும், தினந்தோறும் ஸேவை சாற்றுமுறைகளும், பலவித்வான்களின் உபன்யாஸங்களும் நடைபெறுமென்றும் ஸ்ரீரங்கம் ஸ்ரீ அஹோபிலமடம் ஏஜண்ட் நரஸிம்ஹ ஐயங்கார் தெரிவிக்கிறார்.

36-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரம், பாதூர்.

நாளது மன்மதஹூ ஆடிமீ 21வ செவ்வாய்க்கிழமை (16-8-55) இவ்வூர் அக்ரஹாரத்திற்கு அணியாக, ப்ருந்தாவனத்தில் கோயில் கொண்டு சிஷ்யர்களை உஜ்ஜீவிக்கும்படி செய்து வரும் ஸ்ரீ அஹோபிலமடம் 36-வது பட்டம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் ஸ்ரீ அழகிய சிங்கரின் ப்ருந்தாவனத்தில் இரண்டு நாள் முன்னதாகவே உபய வேதங்களின் தொடக்கத்துடன் உபக்ரமிக்கப்பட்டு நடந்து வந்தது. திருநக்ஷத்ரத்தன்று ஸ்ரீ பெருமாள், தேசிகன் இவர்களுக்குத் திருமஞ்சனம் கண்டருளப் பண்ணப்பட்டது. பிறகு ஸ்ரீ அழகிய சிங்கர் புறப்பாட்டிற்கேற்ப நன்கு அலங்கரிக்கப்பட்டவுடன் உபய வேதபாராயணங்களுடனும், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத பாடசாலையின் மாணக்கர்களின் ஸ்தோத்ர கோஷத்துடனும், சிஷ்ய கோடிகளாலேயே எழுந்தருளப்பண்ணப்பட்டு திருவீதி நான்கிலும், புறப்பாடு கண்டருளியாயிற்று. பிறகு ஸ்ரீ அழகியசிங்கர் கோயிலுக்குமுன் எழுந்தருளி பெருமாள், தாயார் முதலியவர்களை மங்களாசாஸனம் செய்து மாலை முதலிய மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு ப்ருந்தாவனத்திற்கெழுந்தருளினார். பிறகு ஸ்ரீ அழகியசிங்காலநுக்ரஹிக்கப்பட்ட த்ரவ்யத்தைக்கொண்டு விசேஷ ததீகைகளைப் பெருமாளுக்கும் ஸ்ரீ அழகியசிங்கருக்கும் கண்டருளப்பண்ணி ஸேவை சாற்றுமுறை கோஷ்டி விநியோகத்துடன் உத்ஸவம் இனிது முடிந்தது. இவ்வுத்ஸவத்தை ஆரம்பம் முதல் முடிவுவரை மிகவும் சிரத்தையுடன் தர்மகர்த்தா ஸ்ரீ. உ. வி. ஸுந்தரமய்யங்கார் நடத்திவைத்தது போற்றத்தக்கது.

T. S. கோபாலய்யங்கார், தலைமை ஆசிரியர்,
ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, பாதூர்.

ஶ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

‘தஸ்மாத்பாரத ஸர்வாத்மா பகவாந் ஹரிரீஶ்வர:। ஶ்ரோதவ்ய: கீர்திதவ்யஶ்ச ஸ்மர்தவ்யஶ்சேச்சதாபயம்’ என்று ஹரிச்ரவண கீர்த்தநாதிகளையே அபய மோக்ஷ ப்ராபகமாக உபதேசத்தொடக்கத்திலேயே 2-ம் ஸ்கந்தம் முதலில் அறுதியிட்டார். உபதேச முடிவிலும் 12-வது ஸ்கந்தக் கடைசிச்லோகம் ‘ஏதத்தே கதிதம் தாத யதாத்மா ப்ருஷ்டவாந் ந்ருப। ஹரேர்விஶ்வாத்மநஶ்சேஷ்டாம் கிம் பூய: ஶ்ரோதுமிச்சஸி ॥’ ‘விச்வசரீரியான ஹரியின் கதைகளையே உபதேசித்தேன். இன்னும் என்ன கேட்க ஆசை?’ என்று அதுதான் கடைசி உபதேச ச்லோகம். உபக்ரமத்திலுமுபஸம்ஹாரத்திலும் ‘ஹரிநாமமே’ என்பதை இங்கே ‘ஹரிதத்வம்’ என்பதால் வ்யஞ்ஜனம். ஹரிவிச்வாத்மா, விச்வசரீரி என்று உபதேசத்தை முடித்தார். நாடகங்கள் முடிவில் இன்னுமென்ன ப்ரியம் வேணும் என்று கேட்பது போல, பரீக்ஷித்தின் ஸம்ஸார நாடக முடிவிலும், ‘பகவதவதாரநாடகங்களை வர்ணிக்கும் பாகவதோபதேசமுடிவிலும் ‘இன்னுமென்ன ப்ரியச்ரவணத்திலாசை’ என்று வினவினர். திவ்யகதியோக்யம் — திவ்ய பரமபதத்திற்குக் கிளம்பிப்போக யோக்யரான, த்வாம்— உன்னை, மோக்ஷயாமி— விடுவிக்கிறேன். சுகர் குணபரிபூர்ணப்ரஹ்மத்தின் குணங்களாலே பக்தராய், நிர்குணப்ரஹ்மத்தைத்தேடாமல் ஸகுணப்ரஹ்மபக்திநிஷ்டையிலிருந்து மோக்ஷம் சென்றார். ‘ஶுகஸ்ய மாதாபித்ரோர் மதிம் க்ருத்வாநுஸந்க்ஷம:। ஈஶ்வரோऽபி ப்ரஹ்மவம் ஸர்வபூதமநோபவ:॥’ என்கிற வசநத்தை நினைத்து இங்கே ‘திவ்யகதியோக்யமாய்’ என்று படிப்பது. ‘வ்யாஸஸூநுரிவ’ என்று ப்ரபாவளி உரை. ராவணனுடைய சாரனாகிய சுகனை ராகவன் விடுதலைசெய்ததும் ராகவதயாஸங்கல்பமே. அவனுக்கு முக்யனான யஜமானனான ராவணனிடத்தில் ராகத்தால் அவன் தமக்குத் தீங்கு செய்ய முயன்றது என்ன தோஷமென்று ராகவன் கருத்து.

வரப்போகிற மோக்ஷஸித்தியை வர்ணிப்பதைக் கேளும்.

நிர்முக்தத்ருணாஜிநவத் பரமே
ப்ரஹ்மோபவஸம்வத்தித: ப்ராக்ருதமுக்த
மணாஸக்ஷஸ்ய வ பரம் ஸாயமுக்தஶ்ச
யக்ஷ:। பாராவயவிஹாமலக்ஷணபரி
த்ராமஹ்ஸஜோஸிதா ஶேஷாஶேஷிவ
ஶேஷவ்ருத்திரபி தே ஸத்தாவயி: ஶேஷ-
த்ருதி ॥

‘ததா வித்வாந் நாமரூபாத்விமுக்த:’ என்ற ச்ருதிப்படி நாமரூபஸம்ஸாரப்ரபஞ்சத்திலிருந்து விடுதலையைக் கூறினர். ‘நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி’ என்று அதற்கு மேலிருப்பதை வர்ணிக்கிறார். ‘நிர்முக்தத்ருணாஜிநவத் — க்ருஷ்ணம் (கருப்பு) ரோஹிதம் (சிவப்பு) ஸத்வம் (வெள்ளை) ஆகிய மூன்று வர்ணங்களையும் கலந்து பூசியிருப்பது போலிருந்தது. அந்த முக்குணவர்ணப்பசையைத் தயாப்ரவாஹங்களால் கழுவி வெள்ளை பூசி சுத்தஸத்வவெண்மையாய்விட்டது. அவித்யை முழுவதும் தொலைந்தது. இது எப்பொழுது? ‘ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே’ என்கிற சாந்தோக்யச்ருதியையும் இங்கே நினைக்கவேணும். சரீரமெனும் கூண்டிலிருந்து விடுதலையாகி வெளிப்பட்டு ‘பரம் ஜ்யோதி’ எனும் நாராயணபரப்ரஹ்

மத்தை யடைந்து சேஷபர்யங்காரோஹணத்தால் நிச்சேஷமாக ப்ராக்ருத அவித்யாஞ்ஜனம் தொலைகிறதென்பதை 'பரப்ரஹ்மாவஸ்தித:' என்றதால் காட்டுகிறார். இது முன்னும் பின்னும் ஒட்டுவதற்காக நடுவில் வைத்துளது. உபஸம்பன்னனாகி தன் ஸ்வரூபத்தின் முழு ப்ரகாசத்தினுதயத்தைப் பெறுகிறான்' என்பதை விளக்குகிறது. 'பரம' என்பது ச்ருதியிலுள்ள 'பரமம் ஸாம்யமுபைதி' என்பதை ஸூசித்து 'மிகச்சிறந்த ஸாம்யமேயல்லாது உபஸம்பத்தி என்பது ப்ரஹ்மமேயாவதல்ல' என்பதைக் காட்டுகிறது. 'பரமம் ஸாம்யமுபைதி' என்பதுதான் ப்ரஹ்மத்தை யடைவதெனும் உபஸம்பத்தி. 'ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேநசப்தாத்'- ஸஹஜஸ்வரூபத்தின் ஆவிர்பாவம் ப்ரஹ்மஸம்பத்தியால் வருகிறதென்று ஸூத்ரக்காரர் கூறியதையும் ஸூசிக்கிறது. 'அபிநிஷ்பத்தி' என்பது புது உத்பத்தியல்ல, மறைந்திருந்ததின்ப்ரகாசமே. (ஆவிர்பாவமே.) அடுத்தாப்போல் வரும் 'விததிவஸே' என்னும் ச்லோகத்திலுமிது விஸ்தாரமாய் வர்ணிக்கப்படுகிறது. இந்தப் பரமமங்களத்தை எத்தனை தடவை வர்ணித்தாலென்ன. 'ஹேது: கியத்த்வத்ஸுதி நாவஸிதே ச்ருணுதாத்ருதம்' என்றபடி கேட்கக் கேட்க திகட்டாத விஷயம். இங்கே இதை வர்ணிப்பது ஸங்கல்பர். அந்த ச்லோகம் இதை நன்கு உணர்ந்துகொண்ட புருஷன் வாயால் வர்ணிப்பது. என் குணங்கள் உபாஸ்யாவதிவிசேஷ்யகளில்கூறப்பட்ட அபஹதபாப்மத்வாதிகள். 'பரம ஸாயுஜ்யமேஷ்யஷ:' 'பரமம்' என்றும் பாடம். 'ஸாம்யம்' என்று ச்ருதியிலுள்ளதற்கு, 'ஸ ஸாயுஜ்யமேதா:' என்று பகவானுடைய உபப்ரஹ்மண உரையை ஸூசிக்கிறது. 'ஸாம்யம்' என்பதற்கு ஐக்யம் பொருளாகாது. 'பராவரத்விஹாமமக்ஷண வஸிஷ்டம ப்ரஸஜ்ஜோஸ்திதா' ப்ரஹ்மமே ஆய்விட்டாலென்ன? நல்லது தானே! அதை ஏன் நாம் மறுதளிக்க வேண்டும்? நம்முடைய ஸஹஜ ஸ்வரூபம் சேஷத்வம். பரனாகிய ப்ரியதமஸ்வாமியான பதிக்குக்கைங்கர்யம் செய்வதே நமக்கு இன்பம். ப்ரஹ்மமேயாவதானால் இந்த ஸ்வரூப ஸஹஜரஸம் போய்விடும். மோக்ஷத்திலிருந்து திரும்பிக் கீழே தள்ளப்படுவதென்ற ஆவ்ருத்தி எப்படி அநிஷ்டமோ அதுபோலவே இந்த சேஷசேஷிபாவத்தில் மாறுதல் படுவதும், மீண்டும் ஸ்வாதந்த்ரியம் நினைப்பதும் கொண்டாடுவதும் அத்யந்த அநிஷ்டமென்று த்வநிக்கிறது. 'அநாவ்ருத்தி: சப்தாத்' என்று ஆவ்ருத்தி ப்ரஸங்கத்தைக் கடைசி அதிகரணம் கடைசி ஸூத்ரத்தில் மறுதளித்தது. 'ஜகத்வ்யாபாரவர்ஜம்' 'போகமாத்ரஸாம்யலிங்காச்ச' என்றுபக்ரம (முன்) ஸூத்ரங்களில் பராவரவிபாகத்தை (சேஷசேஷிவிபாகத்தை) ஸூத்ரகாரர் முதலிலேயே அறுதியிட்டார். அப்படி விபாகம் இருப்பதே போகம், இன்பம் என்பதையும் காட்டினார். ஶேஷாஶேஷிவ–பகவானுக்கு எப்படி எப்படி திருவுள்ளமோ அதற்குத் தகுந்தபடி (உசிதமாக) (யதோசிதம்) தம் திருமேனியை அமைத்துக்கொண்டு கைங்கர்யம் செய்வதால் 'சேஷன்' என்று அஸாதாரணமான திருநாமத்தைப்பெற்றவர். ஆதிபதத்தால் மற்ற நித்யஸூரிகள், முக்தர்கள் க்ராஹ்யர்கள். இது எம்பெருமானுருடைய கீர்த்தனமுமாகும். அவர் 'அநந்த போகி' அவர்போகமும் பகவதாநந்தத்தைப் போல அநந்தம். 'ஶேஷவ்ருத்திரபி- இது தான் எல்லாவற்றிற்கும் மேற்பட்ட இன்பம். இதுதான் ஆநந்தங்களில் சிகரமானது. பகவானுக்கு இந்த பரிசர்யாவ்ருத்தி கிடைப்பது அரிது. 'அபி' என்பது மிக்கரஸம். தே- உமக்கு, ஸத்தாவயி: - உம் ஸ்வரூபமுள்ளளவும், நித்யமாக, ஸேத்ஸ்யதி – ஸித்திக்கும். எம்பெருமானார் கத்யப்ரார்த்தனைகளை நினைக்க வேணும்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஓர் விண்ணப்பம்

வழக்கப்படி நமது பத்ரிகையின் அடுத்த ஸஞ்சிகை ஆசார்யஜயந்திமலராக வெளிவர ஏற்பாடாகியிருக்கிறது. அதற்கு ஆசார்யோத்தமர்களது விஷயமாகவும், அருளிச்செயல்களைப்பற்றியும், மற்றும் ஆங்காங்கு கோயில்கொண்டுள்ள ஸ்தலங்களில் நடக்கும் விசேஷங்களைக் குறித்தும் நம் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவில் 4 பக்கங்களுக்கு மேற்படாமல் வ்யாஸங்களை, ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸம்பாதகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்; என்ற விலாஸத்திற்கு அனுப்பும்படிப்ரார்த்திக்கிறோம். வ்யாஸங்களெல்லாம் ஸெப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்குள்கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும்.

மற்றும் ஆசார்யஜயந்திமலரில் ப்ரசுரிக்கத் தகுந்த போட்டோக்களை ப்ளாக் செய்து அனுப்பினால் அவைகளும் ப்ரசுரம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

— ஸம்பாதகர் —

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸில் அடியிற்கண்ட புத்தகங்கள் விற்பனைக்குக் கிடைக்கும்

1.	அதிகரணஸாராவளி (சிந்தாமணி கல்பதரு வ்யாக்யானங்களுடன் கூடியது)		ரூ. 7—0—0
	ஷை பைண்ட் செய்யாதது		5—0—0
2.	விசிஷ்டாத்வைதவேதாந்தகோசம் (அகராதி)		20—0—0
3.	ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் (முதல் பாகம்) (ஸ்ரீ ஸாரபோதினீ வ்யாக்யானத்துடன் கூடியது	காலிகோபைண்ட்	6—8—0
		பாதி காலிகோ	6—0—0
	ராப்பர் பைண்ட்		5—8—0
4.	சாற்றுமுறைக்ரமம்		0—12—0
5.	யஜுஸ்ஸந்த்யாவந்தனபாஷ்யம்		0—12—0
6.	ஸ்ரீ ஸந்நிதி நித்யாநுஸந்தானக்ரமம் (கோயில் திருவாய்மொழி, ராமாநுஜநூற்றந்தாதிகளுடன் கூடிய இரண்டாம் பதிப்பு)		0—10—0
7.	ஸ்ரீ அஹோபிலமடமும் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரமும் (சித்திரங்களுடன் தமிழ், ஆங்கிலம் இரண்டு பாஷைகளிலும் கிடைக்கும்)		0—2—0
8.	ஸ்ரீ ஸந்நிதி தனியன்கள்		0—3—0
9.	வைபவஸுதா (42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திவ்யசரிதம்)		1—4—0

வி. பி. பி. யில் அனுப்பப்படமாட்டாது. (போஸ்டேஜ், பாக்கிங் செலவு தனி)

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[மன்மத ௵ தக்ஷிணாயனம் வர்ஷ ருது - கந்யா ௴ 1955 ஆகஸ்டு - செப்டம்பர்]

17-9-55	புரட்டாசி ௴ 1௨	சனிக்கிழமை	கந்யாரவி 11-13; ஷடசீதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; கந்யா சுக்ல த்விதீயைதிதி.
19-9-55	3௨	திங்கட்கிழமை	சதுர்த்தி திதி.
20-9-55	4௨	செவ்வாய்க்கிழமை	அதிதி.
21-9-55	5௨	புதன்கிழமை	விசாகம்; 33-வது பட்டம் ஸ்ரீசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
23-9-55	7௨	வெள்ளிக்கிழமை	திருக்கேட்டை; ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
27-9-55	11௨	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி; ச்ரவணம்; ஸ்ரீமத்வேதாந்ததேசிகன் திருநக்ஷத்ரம். (பரிவர்த்தந ஏகாதசி)
28-9-55	12௨	புதன்கிழமை	த்வாதசி; ஹரிவாஸரம் 5-23.
1-10-55	15௨	சனிக்கிழமை	○ பூர்ணிமை.
4-10-55	18௨	செவ்வாய்க்கிழமை	மஹாபரணீ.
6-10-55	20௨	வியாழக்கிழமை	வ்யதீபாதம்.
7-10-55	21௨	வெள்ளிக்கிழமை	ஷஷ்டி – ஸப்தமி திதித்வயம்.
8-10-55	22௨	சனிக்கிழமை	மத்யாஷ்டமி.
12-10-55	26௨	புதன்கிழமை	ஏகாதசி வ்ரதம்; ஸந்யஸ்தமஹாளயம்.
15-10-55	29௨	சனிக்கிழமை	மஹாளயஅமாவாஸ்யை; ஸாமோபாகர்மா.
17-10-55	31௨	திங்கட்கிழமை	துலாரவி 38-35. விஷுபுண்யகாலம்; ஸங்க்ரமணதர்ப்பணம்; சூன்யதிதி; நவராத்ரிஉத்ஸவாரம்பம்.

[சரத்ருது – துலா௴]

18-10-55	ஐப்பசி௴ 1௨	செவ்வாய்க்கிழமை	துலாசுக்ல த்ருதீயை திதி.
22-10-55	5௨	சனிக்கிழமை	ஸப்தமிதிதி, பூராடம்; ஸேனைமுதலியார் திருநக்ஷத்ரம்.
23-10-55	6௨	ஞாயிற்றுக்கிழமை	அஷ்டமிதிதி.
24-10-55	7௨	திங்கட்கிழமை	அதிதி.
25-10-55	8௨	செவ்வாய்க்கிழமை	திருவோணம்; பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்; மஹாநவமி.
26-10-55	9௨	புதன்கிழமை	அவிட்டம்; பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்; விஜய தசமி.
27-10-55	10௨	வியாழக்கிழமை	சதயம்; பேயாழ்வார் திருநக்ஷத்ரம்; ஏகாதசி.
30-10-55	13௨	ஞாயிற்றுக்கிழமை	சதுர்தசி - பூர்ணிமை திதித்வயம்.
31-10-55	14௨	திங்கட்கிழமை	ப்ரதமை திதி.